Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 293
வெள்ளிக்கிழமை
புரட்டாதி 02 ஆம் நாள்
18 செப்ரெம்பர் 2021
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 20
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## கொரோனாவால் வவுனியாவில் இருவர் சாவு

வுனியா, செப். 18
வவுனியாவில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருவர் நேற்று உயிரிழந்துள்ள 19

# முதலாம் திகதியுடன் ஊரடங்கு 'அவுட்'!

- அதுவரையான 10 நாள்களும் ஊரடங்கு நீடிப்பு
- மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி
- நாள்பட்ட நோயுள்ள மாணவருக்கு முன்னுரிமை
- பாடசாலைகளைத் திறக்க இணைந்து பணியாற்றவும்
- ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் தீர்மானங்கள்

கொழும்பு, செப்ரெம்பர் 18

நாடு முழுவதும் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், அன்றையதினத்துடன் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுவிடும். அதற்குப் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீடிக்காது– என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது. 19

## வாழ்வாதாரத்துக்கு வழிகாட்டவேண்டும்

சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மற்றுமொரு சுமை

கொழும்பு, செப். 18
"சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் ஈடுபடுவோர், சுயதொழில்களை மேற்கொள்வோர், எவ்விதத் தடையுமின்றி தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவது, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பொறுப்பு" என்று ஜனாதிபதி தெரிவித்தார். 19

## 121 பேர் சாவு

கொழும்பு, செப். 18
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 121 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 938 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரி 19

## வீதிகளில் பொதுமக்கள்; வீடுகளுக்குள் வைரஸ்!

விசேட வைத்திய நிபுணர் ஜீவந்தர தெரிவிப்பு

கொழும்பு, செப். 18
"நாடு முழுவதும் கொரோனாவின் டெல்டா வைரஸே தாண்டவமாடுகின்றது. இந்தநிலையில், நாட்டைத் திறக்கும் திகதியை அரசு ஒக்ரோபர் முதலாம் திகதி வரைக்கும் பிற்போட்டமை வரவேற்கத்தக்கது. ஆனால், ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் வீதிகளில்தான் பயணிக்கின்றார்கள 19

## கொரோனாத் தொற்று 5●●●●●+

கொழும்பு, செப். 18
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. அந்தவகையில் நேற்று 2 ஆயிரத்து 70 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 19

## வீட்டுத்திட்டக் கொடுப்பனவை இரு மடங்காக அதிகரிக்கவும்

கட்டடப்பொருள்களின் விலை அதிகரிப்பால் பயனாளிகள் கோரிக்கை

தென்மராட்சி, செப். 18
கட்டடப் பொருள்களின் விலை அண்மைக்காலமாக நாளாந்தம் அதிகரித்துச்செல்வதால், வீட்டுத் திட்டத்துக்கென அரசு வழங்கும் கொடுப்பனவு போதாதுள்ளது. எனவே, வீட்டுத்திட்டக் கொடுப்பனவை அரசு அதிகரித்து வழங்கவேண்டும் என்று வீட்டுத் 19

## உத்தியோகபூர்வ அறிவிப்பின்றி மதுவிற்பனை நிலையங்கள் திறப்பு

சுகாதார விதிமுறைகளைமீறி தள்ளுப்பாடு
வேடிக்கை பார்த்துநின்ற பொலிஸார்

யாழ்ப்பாணம், செப். 18
மதுபான சாலைகளைத் திறப்பது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகாதநிலையில், நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளபோதும், வடக்குமாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும். 18



## அமைச்சர்களின் அடாவடிகளால் ஆளுங்கட்சி எம்.பி. இராஜினாமா!

கொழும்பு, செப். 18
அமைச்சர்களின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு கடும் எதிர்ப்பை வெளியிடும் வகையில் பாதுக்க பிரதேச அபிவிருத்திக் குழு தலைமைப்பதவியை இராஜினாமா செய்துள்ளார் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார. 18

## யாழ்.பல்கலை. பட்டமளிப்புக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, செப். 18
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பை, விழாவாக நடத்த அனுமதி வழங்க முடியாது. நிகழ்நிலையில் நடத்த மட்டும் அனுமதி வழங்கலாம் என்று காதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித 18

## காயங்களுடன் சடலம் மீட்பு: கொலையென்று கூறிய உறவுகள் நீதி வழங்குமாறு போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 18
காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாக சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் உயிரிழப்புக்கு நீதிகோரி உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடு 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்கு காலத்தில்

# மக்கள் மீதான பிரச்சினைகளை அரசு கருத்தில்கொள்ளவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 18

**ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில்கொள்ளாமல் அரசு செயற்படுகின்றது" என்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,
"விவசாயிகள் விவசாயத்தை விட்டு விலகிச் செல்வதைத் தடுக்கவும், விவசாயிகளின் சீரழிந்துவரும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உடனடித் தீர்வுகளை அரசு வழங்க வேண்டும்.
உழவர் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்த அரசால் புரிந்து கொள்ள முடியவில்லை.
கொரோனாத் தொற்று நோயுடன் போராடும் உலகின் பல நாடுகள் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்துள்ள போதிலும் இலங்கை அரசு இரண்டையும் புறக்கணித்துள்ளது" என்றார். (த22)

# நாடாளுமன்ற அமர்வுகள் இந்தமுறையும் இரு நாள்கள்

கொழும்பு, செப். 18
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுக்கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் தற்போது நிலவும் கொரோனாத் தொற்றுநோய் சூழலைக் கருத்திற்கொண்டு அடுத்த வாரத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை செப்ரெம்பர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 வரை மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 05 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 06 கட்டளைகள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 03ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்கிவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.
இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன் 4.50 மணி முதல் 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.செப்டெம்பர் 22ஆம் திகதி புதன்கிழமை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைத் (திருத்தச்) சட்டவரைவு (இரண்டாவது வாசிப்பு) மற்றும் தாவர விலங்கினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (த44)

கறுப்பு பூஞ்சை நோய் போல

# எஸ்பகிலோசிஸ் பூஞ்சை இதுவரை 700 பேர் பாதிப்பு

கொழும்பு, செப். 18
கறுப்பு பூஞ்சை நோய்க்கு மேலதிகமாக எஸ்பகிலோசிஸ் என்ற பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட 700 கொரோனாத் தொற்றாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் பூஞ்சை தொற்று தொடர்பான விசேட
வைத்தியர் ப்ரிமாலி ஜயசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.
சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
கொவிட் அசோசியேட் பெல்மனரி எஸ்பகிலோசிஸ் என்ற பெயரில் அடையாளம் காணப்படும் இந்த நோய் கடந்த ஏப்ரல் தொடக்கம் நாட்டில் பரவி வருகின்றது. கறுப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்ட 12 கொரோனாத் தொற்றாளர்கள் மாத்திரமே இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தஇ)

# கொரோனாவைக் காரணம்காட்டி நினைவேந்தலை அடக்குகிறது அரசு

### முன்னாள் பிரதித் தவிசாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 18
கொரோனாவைக் காரணம் காட்டி, அரசு எம் நினைவுகளைத் தடுக்க எண்ணுகின்றது. அடக்க அடக்க நினைவுகள் அதிகரிக்குமே தவிர என்றும் அடங்காது. இவ்வாறானா செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயற்பாடுகளையே அரசு மேற்கொள்கின்றது என்று கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளர். பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.
திலீபன் நினைவேந்தலை நினைவுகூருவது தொடர்பில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை மட்டக்களப்பு பொலிஸ் நிலைய அதிகாரி நேற்றுக் கையளித்தார்.
அதன்பின்னர் அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழினத்துக்காகப் போராட்ட வரலாற்றின் நினைவேந்தல்களை அனுஸ்டிப்பதற்கு எதிரானவர்கள் என்று மட்டக்களப்பில் யாரும் இருக்கமாட்டார்கள். அப்படி இருக்க நினைவேந்தல்களுக்கு எதிரானவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது பொய்யான அறிக்கையாகவே தெரிகின்றது. பொலிஸாரால் நீதிமன்றுக்கு பொய்யான தகவல்கள் சொல்லப்பட்டு. தடையுத்தரவுகள் பெறப்படுகின்றனவோ எனச் சந்தேகிக்கத் தோணுகின்றது.
அடுத்து கொரோனா, தமிழ் மக்களின் நினைவேந்தல்களுக்கு மாத்திரம் எவ்வாறுதான் கொரோனா பரவுகின்றதோ தெரியவில்லை. அரசு மக்களின் மனங்களை வெல்வதை விடுத்து மீண்டும் மீண்டும் இவ்வாறானா செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்துகின்றது. என்றார். (த-150)

# சந்தை வியாபாரியிடம் 15,000 ரூபா கொள்ளை


## நீர்வேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 18
சந்தை வியாபாரத்துக்குச் சென்றுவிட்டு திரும்பிய நபரை அச்சுறுத்தி அவரிடமிருந்து 15 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம், நீர்வேலி மாசியன் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.
அச்சுவேலி வடக்கு பகுதியைச் சேர்ந்த வியாபாரி ஒருவரின் பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-25)

# தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கத் திட்டம்

கொழும்பு, செப். 18
தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனப் போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஊடகங்களிடம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
"நாட்டில் 17 ஆயிரம் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது.
கொரோனாத்தொற்று நோயால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது.
பஸ்களை இயக்கும்போது கருத்தில்கொள்ளப்படும் அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்படும் வகையில் இது வழங்கப்படும். ரயர்கள், பெற்றோல், டீசல், என்ஜின் ஒயில், பற்றரி, உதிரிப் பாகங்கள் மற்றும் காப்பீடு ஆகியவற்றின் விலையை உள்ளடக்கிய வவுச்சர்கள் சலுகைத் தொகுப்பில் சேர்க்கப்படும்" என்றார். (த22)
....

# வடக்கில் இன்று மழைக்கு வாய்ப்பு



யாழ்ப்பாணம், செப். 18
வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் மற்றும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
அத்துடன், பலத்த இடி மற்றும் மின்னல் தாக்கங்கள் ஏற்படக்கூடும் என திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.
இத்தகைய நேரங்களில் பொதுமக்கள் தம்மையும் தமது வீட்டிலுள்ள இலத்திரனியல் பொருள்களையும் பாதுகாக்கும் வகையில் செயற்படுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் தடுப்பூசி பெறுவதில் ஏற்பட்ட தாமதமே

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, செப். 18**

**"நாட்டில் தடுப்பூசி செலுத்துவதைத் தாமதப்படுத்தியதன் காரணமாகவே கொரோனாச் சாவுகளின் எண்ணிக்கை அதிகரித்தது. நாட்டில் கொரோனாச் சாவுகள் அதிகரித்தமைக்கு அரசே முழுப்பொறுப்பு." என்று, சஜித் அணி குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் ஊடகங்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் புள்ளிவிவரத் தகவலுக்கு அமைவாக நாட்டில் இதுவரை கொரோனாச் சாவுகளின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்து 12 ஆயிரத்தை நெருங்குகின்றது. இந்தச் சாவு எண்ணிக்கையைப் பார்க்கும்போது கொரோனாத் தொற்றால் மரணிப்பது சாதாரண விடயமாக மாறியுள்ளது. நாம் சிலருக்கு சில விடயங்களை நினைவுப்படுத்த வேண்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் ஏற்படுவதற்கு முன்பாக நாம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தோம்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டில் ஏற்பட்டால் அதனைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா?, முகக்கவசங்கள் கொண்டுவரப்பட்டுள்ளனவா? என நாடாளுமன்றத்தில் நாம் கேள்வி எழுப்பியிருந்தோம்.

அதன்போது பதிலளித்த சுகாதார அமைச்சர் அவ்வாறான ஒரு தேவை நாட்டுக்கு ஏற்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

மெய்ஞானத்தின் பக்கம் செல்லாது விஞ்ஞானபூர்வமாக கொரோனாவின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறு நாம் அரசை வலியுறுத்தினோம்.

விஞ்ஞானபூர்வமாகத் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுக்குமாறும் கோரினோம்.

நாம் கூறியதை அவர்கள் கேட்கவில்லை. தற்போதுதான் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்தது.

சரியான முறையில் ஆரம்பத்திலேயே தடுப்பூசியைக் கொண்டுவந்திருந்தால் இந்த 11 ஆயிரம் பேரை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. எனவே, கொரோனாச் சாவுகள் அதிகரித்தமைக்கு அரசே முழுப்பொறுப்பு" என்றார். (த22)


# யோக்கட் வாங்கினால் பால்மா: கம்பி எண்ணும் வியாபாரிகள்!

கொழும்பு, செப்.18

யோக்கட்கள் வாங்கினால்தான் பால்மா பக்கெற்றுக்களை வழங்க முடியும் என்று நுகர்வோருக்கு அழுத்தம் கொடுத்த கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

6 யோக்கட்கள் வாங்கினால் ஒரு பால்மா பக்கெற் வழங்க முடியும் என்று நுகர்வோருக்கு அழுத்தம் கொடுத்த தியத்தலாவையைச் சேர்ந்த கடை உரிமையாளர்களே, நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே நேரம், வடக்கு மாகாணத்திலும் இவ்வாறு நுகர்வோருக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# பிரசவ வலியுடன் வந்த கர்ப்பிணிக்குத் தொற்று

## சாவகச்சேரியில் சம்பவம்

சாவக்ச்சேரி, செப்.18

பிரசவ வேதனையுடன் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட கர்ப்பிணிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரியில் நடந்துள்ளது. மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்ட கர்ப்பிணிக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மிகக் குறைவான கர்ப்பிணிகளே கொரோனாத் தடுப்பூசி ஏற்றியுள்ளனர். ஏனையோர் வதந்திகளை நம்பி தடுப்பூசி ஏற்றாமல் உள்ளனர்.

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிகள் கிளினிக்குகள், ஸ்கானிங், மகப்பேற்று நிபுணர் சந்திப்பு போன்ற இடங்களுக்கு அடிக்கடி சென்றுவருவதால் தொற்றுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு கர்ப்பிணிகள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

# அதிக விலைக்கு மணல் விற்றால் அறிவிக்கவும்

மன்னார்,செப்.18

அதிக விலைக்கு மணல் விற்பனை செய்பவர்களது வாகன இலக்கங்களுடன் கூடிய முழு விவரங்களையும் உடனடியாக மாவட்டச் செயலகம் அல்லது பிரதேச செயலகத்துக்குத் தெரியப்படுத்துமாறு மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரில் அனுமதிக்கப்பட்ட நிர்ணய விலையைவிட அதிக விலைக்கு மணல் விற்பனை செய்யப்படுகின்றது என்று பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். நிர்ணய விலையை விட அதிக விலைக்கு மணல் விற்பனை செய்தமை உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் உடனடியாக ரத்துச் செய்யப்படும்.

அதேவேளை மணல் தேவைப்படுவோர் தங்கள் பகுதி கிராம சேவையாளர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4,213)

# கொடிகாமம் இளைஞன் இறப்பில் சந்தேகம் வெளியிடும் பெற்றோர்

கொடிகாமம், செப்.18

கொடிகாமம், காரைக்காட்டுப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விபத்துக்குள்ளாகி உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள், இளைஞனின் உயிரிழப்பில் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கொடிகாமம், கொயிலாமனையைச் சேர்ந்த 24 வயதுடைய இராஜேஸ்வரன் நவர்ணன் விபத்தில் உயிரிழந்திருந்தார். கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் வீதியோர மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் தமது மகன் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று உயிரிழந்தவரின் பெற்றோர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். தங்கள் மகனை தொலைபேசி மூலம் அவரது நண்பர்கள் அழைத்தனர் என்றும், விபத்து ஏற்பட்டதும், அருகில் உள்ள பெற்றோருக்கு அறிவிக்காமல், வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு உடனடியாக அறிவிக்கப்படவில்லை. மகனின் இறப்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நண்பர்களையும் விசாரிக்க வேண்டும் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதையடுத்து, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கொடிகாமம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-159)

# வற்றாப்பளை சென்று வழிபட்ட கம்மன்பில!

யாழ்ப்பாணம், செப்.18

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

அங்குள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்குச் சென்று விசேட வழிபாடுகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். (எ-இ)



# 300 ரூபா பணத்தை பெற 250 ரூபா பணம் செலவு!

கிளிநொச்சி, செப். 18

பயணத்தடை காரணமாக முதியோர் கொடுப்பனவைப் பெறுவதற்கு முச்சக்கர வண்டிகளில் வந்துசெல்ல வேண்டியுள்ளது என்று முதியோர்கள் கவலை தெரிவித்தனர். குறித்த 300 ரூபா பணத்தைப் பெறுவதற்கு 200 முதல் 250 ரூபா வரை போக்குவரத்துக்காகச் செலவளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

பயணத்தடை காரணமாக போக்குவரத்தில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு எமது வீடுகளுக்கே குறித்த நிதியை அனுப்பிவைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கையை எடுப்பதன் மூலம் அலைச்சல் இல்லாமல் இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் பெருந்தொற்றில் இருந்தும் பாதுகாப்பாக இருக்க முடியும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றாதோர் சபைக்கு வரமுடியாது

## கரைதுறைப்பற்று பிரதேச சபை அறிவிப்பு

**முல்லைத்தீவு,செப்.18**

**கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாத சபை உறுப்பினர்கள், எதிர்வரும் சபை அமர்வுகளில் பங்கு கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் தெரிவித்துள்ளார்.**




கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 40 ஆவது சாதாரண சபைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தல்களை ஏற்று, பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசியை கட்டாயம் ஏற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் அவர்கள் சபை அமர்வில் பங்கேற்க அனுமதி வழங்க முடியாது. விசேடமாக தனிப்பட்ட மருத்துவ தேவைகருதி, தடுப்பூசி ஏற்றிக் கொள்ளக்கூடாது என்று மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்படுபவர்கள், மருத்துவரின் அறிக்கையைச் சமர்ப்பித்தால் மாத்திரமே சபை அமர்வுகளில் அனுமதிக்கப்படுவர்.

அதேவேளை கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகளில் தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டவர்களுக்கு மாத்திரமே பிரதேச சபை உரிமங்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4,246)

# தற்போதைய அரசால் விரைவுத் தீர்மானங்கள்

கொழும்பு,செப்.18

கடந்த கால அரசை விட, தற்போதைய அரசு ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்களுக்கு விரைவாகத் தீர்மானங்களை எடுத்து வருகின்றது என்று இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் பதவி விலகல் தொடர்பில், அவர் தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிடுகையில்,

சில வருடங்களுக்கு முன்பு அரசியல்வாதி ஒருவர் தொலைக்காட்சி நிலையம் ஒன்றுக்குள் அத்துமீறிச் சென்று செயற்பட்டமை தொடர்பில், அப்போதைய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் தற்போதைய அரசு ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்களுக்கு விரைவாகத் தீர்மானம் எடுத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. எவரும் சட்டத்துக்கு ஒரு படி மேல் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சிலர், அமைச்சரால் நினைவுகூரப்பட்ட அரசியல்வாதி முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா. அச்சம்பவத்தின் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவே ஜனாதிபதியாக பதவி வகித்தார் என்று பதிவிட்டுள்ளனர். (ஒ.4)

# நினைவரங்க நிகழ்வு

திருகோணமலை,செப்.18

மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியருக்கான நினைவரங்க நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சூம் செயலியினூடாக இடம்பெறவுள்ளது.

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கவிஞர் சம்பூர் சமரன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நிகழ்நிலை ஒருங்கிணைப்பை கவிஞர் பா. பிரியங்கன் வழிநடத்த, நினைவுப் பகிர்வுகளை பேராசிரியர் பாலசுகுமார், கலாசார உத்தியோகத்தர் வி. குணபாலா, மருத்துவர் அ. சதீஸ்குமார், கவிஞர்களான யோகானந்தன், சச்சிதானந்தம், சுஜந்தன், ஸ்ரீ ஞானேஸ்வரன், அ . அச்சுதன், சி. பிரகாஷ் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஐ-40)

# தண்ணீர்க் கட்டணத்தை செலுத்துமாறு பணிப்பு

கிளிநொச்சி,செப்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைஊடாக குடிதண்ணீர் பெற்றுக் கொள்பவர்கள், மாதாந்த பட்டியல் கொடுப்பனவு மற்றும் நிலுவைக் கொடுப்பனவுகளைத் தாமதமின்றி செலுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

தற்போதைய முடக்க நிலை மற்றும் கொரோனாத் தொற்றைக் கருத்தில் கொண்டு, https://ebis.waterboard.lk/smartzone/English/OnlinePayments எனும் இணையத்தளத்துக்குள் பிரவேசித்து, தன்னியக்க பணப்பரிமாற்று அட்டைகள் அல்லது கடன் அட்டைகளைப் பயன்படுத்தி, கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும்.

பொது மக்கள் தங்களது ஸ்மார்ட் தொலைபேசியில் NWSDB Self Care அல்லது NWSDB Smart pay ஆகிய செயலிகளைத் தரவிறக்கம் செய்வதன் ஊடாகவும் விவரங்களை அறிந்துகொள்வதோடு, இலகுவாக கட்டணங்களையும் செலுத்தமுடியும்.

அத்துடன் 155 ஆம் கட்டை ஏ/9 வீதியில் அமைந்துள்ள மாவட்டக் காரியாலயத்திலும் கட்டணத்தை நேரடியாகவும் செலுத்தமுடியும் மேலதிக விபரங்களுக்கு 021 2283981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ஒ-4,214)

# இந்த வருட இறுதியில் பொருளாதாரம் உயரும்

## மத்திய வங்கி நம்பிக்கை


கொழும்பு,செப்.18



இலங்கையின்பொருளாதாரம் இந்த வருடத்தின் இறுதியில் ஐந்து வீத வளர்ச்சியை எட்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள அவர், தனது டுவிற்றர் பக்கத்தில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 2021 ஆண்டு அரையாண்டில் 12 .3 . வீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள தொற்றுத் தடுப்புக்கான தடுப்பூசி ஏற்றும் பணி மற்றும் பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 5 வீதம் யதார்த்தமாக அமையும் என்றும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டி யுள்ளார். (ஒ-4)



# 75 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,செப்.18

நெத்தலியாற்று காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 75 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைக்காக சந்தேகநபர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-113)

# பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர் பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு.செப்.18



பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலுக்கு அமைய பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக உலகளாவிய ரீதியில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி தலைமையிலான கொரோனா தடுப்பு செயலணி தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-இ)

# 500 கலைஞர்களுக்கு உலர் உணவுப்பொதி

யாழ்ப்பாணம், செப்.18

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 500 கலைஞர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதி வழங்கப்படவுள்ளது.

நீலன் திருச்செல்வம் அறக்கொடை நிதியம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்வஸ்திக் நுண்கலைக்கல்லூரியுடன் இணைந்து இந்த உதவியை வழங்கவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஸ்வஸ்திக் நுண்கலைக் கல்லூரி அறிவித்துள்ளது. (ஒ-4-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொக்குத்தொடுவாய் வயல் நில

# ஆக்கிரமிப்புக்கு எதிராக கண்டனத் தீர்மானம்

**முல்லைத்தீவு,செப்.18**

**தமிழ் மக்களுக்குச் சொந்தமான கொக்குத்தொடுவாயில் உள்ள வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை கண்டித்து கரைதுறைப் பற்று பிரதேசசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரித்தான பூர்வீக விவசாய நிலங்கள் பலவற்றை வெலிஓயா பகுதியைச்சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து ஆக்கிரமிப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சியைக் கண்டித்து கரைதுறைப்பற்று பிரதேசசபையில் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த அமர்வில் சபை உறுப்பினர் கிருஸ்ணபிள்ளை சிவலிங்கத்தால் குறித்த கண்டனத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே கொக்குத்தொடுவாய் தமிழ் மக்களின் மணலாற்றுப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான பூர்வீக நீர்ப்பாசன பயிர்ச் செய்கை நிலங்கள், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் துணையோடு பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் எஞ்சியுள்ள மானாவாரி விவசாய நிலங்களையும் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிக்க முனைவது கண்டிக்கத்தக்கது என சபை உறுப்பினர் சிவலிங்கம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குறித்த தீர்மானத்தை சபை உறுப்பினர் க.தவராசா வழிமொழிய ஏனைய உறுப்பினர்களும் இக்கண்டனத் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். மேலும் இக்கண்டனத் தீர்மானத்தை உரிய தரப்பினருக்கு அனுப்பி வைப்பதாக தவிசாளர் க.விஜிந்தனால் தெரிவிக்கப்பட்டது. (ஐ-246)



## சட்டம் தன் கடமையைச் செய்யும்

### கூறுகிறார் அமைச்சர் நாமல்

கொழும்பு, செப். 18

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு, சட்டம் உரியவகையில் செயற்படுத்தப்படும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச நேற்று உறுதியளித்தார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறைச்சாலைக்குச்சென்று கைதிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

'இவ்வாறான சம்பவங்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எமது அரசு ஒருபோதும் அனுமதிக்காது. அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு, சட்டம் உரியவகையில் செயற்படுத்தப்படும்' என்றும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டார். (ஒ-44)

## பதவி விலகினால் போதாது கைதுசெய்யப்பட வேண்டும்

**பொலிஸ்மா அதிபரிடம் ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு**

கொழும்பு, செப். 18

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முழுமையானதொரு விசாரணையை முன்னெடுக்குமாறும், சம்பவத்துடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை கைது செய்யுமாறும் வலியுறுத்தி எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடொன்றை பதிவு செய்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், சட்டத்தரணிகள் சகிதம் வருகைதந்து, பொலிஸ்மா அதிபரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மேற்படி முறைப்பாட்டை முன்வைத்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ. அலவத்துவல, ஒரே நாடு, ஒரே சட்டம் எனக்கூறியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் அரசிலுள்ள அமைச்சர்களே சட்டத்தைமீறி செயற்படுகின்றனர். கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலையில் மிலேச்சத்தனமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதனை எவராலும் சகித்துக்கொள்ளமுடியாது. எனவேதான் இச்சம்பவம் தொடர்பில் சட்டத்தை செயற்படுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளோம்.

குற்றத்தை ஏற்றுத்தான் சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் பதவி துறந்துள்ளார். எனினும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முறைப்பாடு இல்லை என பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. இன்று நாம் முறைப்பாட்டை முன்வைத்துள்ளோம். இது தொடர்பில் உடன் விசாரணைகளை நடத்தி, இராஜாங்க அமைச்சரைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்துகின்றோம், என்றார். (ஒ-44)

## நாங்கள் இறப்பதற்கு முன்னர் பிள்ளைகளைக் காட்டுங்கள்

### உறவுகள் கோரிக்கை

மன்னார்,செப்.18

நாங்கள் ஒவ்வொருவராக இறப்பதற்கு முன்னர், எங்களுடைய பிள்ளைகளைக் காட்டுங்கள். ஜெனிவாவின் 48 ஆவது அமர்விலாவது எங்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் மன்னார் மாவட்டத் தலைவி மனுவேல் உதயச்சந்திரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசம் இந்தக் கூட்டத் தொடரில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தை முன்னிலைப்படுத்த வேண்டும். நாங்கள் தீர்வுக்காக ஆயிரத்து 500 நாள்களையும் கடந்து வீதியில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கின்றோம். இது இலங்கை அரசுக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் தெரியும். நாங்கள் போராடுவது சலுகைகளுக்காக அல்ல. எங்களுடைய பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கூறுங்கள். இலங்கை அரசை ஒருபோதும் நம்பவில்லை. எங்களுக்கு சர்வதேச சமூகம் ஒன்றிணைந்து நீதியைப் பெற்றுத்தரவேண்டும். பிள்ளைகளைத் தேடிய நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் இறந்துவிட்டனர். இன்னும் இருக்கும் ஒன்றிரண்டு பெற்றோர்களும் இறந்த பின்பு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சாட்சிகள் எதுவும் இருக்காது. எனவே ஜெனிவா அமர்வில் நல்லதொரு நீதியைப் பெற்றுத் தரவேண்டும்- என்றார். (ஒ-4,213)



### யாழ். பல்கலை மருத்துவபீட

## தகவல் தொழில்நுட்பக் கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் ஐக்கிய அமெரிக்க பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன், மருத்துவபீட பழைய மாணவர்களால் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்துக்குக் கையளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கூடத்தின் திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீடாதிபதி வைத்திய கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தகவல் தொழில்நுட்ப கூடத்தைத் திறந்து வைத்தார். முன்னாள் மருத்துவபீட பீடாதிபதியும், சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் எஸ்.ரவிராஜ், மருத்துவபீட விரிவுரையாளர்கள், பழைய மாணவர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். நாட்டின் தற்போதைய கொரோனா சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த நிகழ்வு மிகவும் குறைந்தளவானவர்களுடன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. (ம)

# மது, புகைத்தல் பொருள்களுக்கு வரி விதிப்பை அதிகரியுங்கள்

### ஜனாதிபதியிடம் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது சாவ. பிரதேச சபை

யாழ்ப்பாணம், செப். 18

மதுபானத்துக்கும், புகைத்தல் பொருள்களுக்கும் கூடுதல் வரியை விதித்து அத்தியாவசியப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரும் பிரேரணையை நிறைவேற்றியது சாவகச்சேரி பிரதேச சபை.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2019ஆம் ஆண்டு சிகரெட் என்ன விலையில் விற்கப்பட்டதோ அதே விலையில்தான் தற்போதும் விற்கப்படுகின்றது. எனவே 20 ரூபா வரையில் வரி விதிப்பை அதிகரித்தால் அரசுக்கு 52 பில்லியன் ரூபா இலாபம் கிடைக்கும். அதன் ஊடாக அரசின் பல தேவைகளை நிறைவேற்ற முடிவதுடன் அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணலாம். அத்துடன் இந்த வரி அதிகரிப்பின் மூலம் சிகரெட் பாவனையாளர்களின் எண்ணிக்கை குறையவும் வாய்ப்புள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஒத்துழைக்காவிடில் நாடு இயல்புக்குத் திரும்பாது

கொழும்பு,செப்.18
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த, மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்காவிடில், மீண்டும் நாட்டை இயல்பு நிலைமைக்குக் கொண்டு வருவது சாத்தியப்படாது என்று சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போது நாளாந்தம் தொற்றாளர்களின் எண்ணிக்கை சுமார் 2 ஆயிரத்து 300 ஆக உள்ளது. இதனை எதிர்கொள்ள சுகாதார அமைப்பு பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.
நாடு இயல்பு நிலைமைக்குத் திரும்புவதாக இருந்தால், நாளாந்தம் அறிக்கையிடப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவேண்டும்.
நாட்டில் பூச்சியமான தொற்றுக்கள் பதிவாகும் ஒரு காலம் இருந்தது. ஆனால் வெளிநாடுகளில் இருந்து திரும்புவோர் மட்டுமே நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டனர். நாட்டில் 100 முதல் 200 தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியிருந்த காலமும் இருந்தது. எனினும் மீண்டும் அதே இயல்பு நிலையை எட்டுவதற்கு தடுப்பூசி செலுத்துதல், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்டவற்றுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (ஒ,4)



*மின்சார சபை*

# பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிப்பு

*அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு*

**கொழும்பு,செப்.18**
**மின் பாவனையாளர்கள் தொடர்ச்சியாக மின் கட்டணத்தை செலுத்தாத காரணத்தால் மின்சார சபை கடுமையான பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளது என்று மின்சார அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கட்டணத்தை செலுத்துவதற்காக பாவனையாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் இவ்வாறு சென்றால் நாம் கடுமையான பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிவரும்
தற்போது சுமார் 44 பில்லியன் ரூபா மின்சார கட்டணம் அறவிடப்படவுள்ளது. எனினும் அதற்கு நாம் வட்டி அறவிடவில்லை. 12 வீத இடைக்கால கொடுப்பனவை வழங்கி அவர்களை நாம் ஊக்கப்படுத்தியுள்ளோம். கட்டணம் செலுத்தக் கூடியவர்களும் செலுத்துவதில்லை. அதுதான் பிரச்சினை. முடிந்தளவில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (ஐ-இ)

# காவலாளிகளை தாக்கிய மேயர்

*மற்றுமொரு சர்ச்சை*

கொழும்பு,செப்.18
பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள காணியொன்றில் பாதுகாப்புக் கடமையில் இருந்த, காவலாளிகளை, ஹம்பாந்தோட்டை மேயர் எராஜ் ரவீந்திர பெர்னாண்டோ தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
பம்பலப்பிட்டி கொத்தலாவல அவன்யூவிலுள்ள காணியொன்றுக்கு இருவேறு தரப்பினர் காவலாளிகளை பணிக்கமர்த்தியுள்ளனர்.
அங்கு ஹம்பாந்தோட்டை மேயர் தலைமையிலான குழுவினர் சென்றுள்ளனர். அவர்கள் காவல் பணியாளர்களைத் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.
மேயர் காவல் ப்ணியாளர்களை தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், அவர்கள் மீது தாக்குதலும் நடத்தினார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடிப்படையாக வைத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ,4)

## ஆவணப்படுத்தல் கலந்துரையாடல்

மட்டக்களப்பு, செப். 18
நூலக நிறுவனத்தின் ஆவணப்படுத்தல் சார்ந்த இணையவழிக் கலந்துரையாடலின் 16 ஆவது தொடர் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
"இயற்கை மரபுரிமைகள் ஆய்வும் ஆவணமாக்கமும், நில ஆவணப்படுத்தலில் புவியிடத் தொழில்நுட்பத்தின் பிரயோகம்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.
நூலக நிறுவன ஆளுகைச் சபை உறுப்பினர் சாரதாஞ்சலி மனோகரனின் ஒருங்கிணைப்பில், கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான இராஜரெட்ணம் கிருபராஜா வளவாளராகக் கலந்துகொள்வார்.
ஆர்வமுள்ளவர்கள் 81415584070 சூம் செயலி இலக்கத்துடன் இணைந்து பங்குபற்ற முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-ரி1)

## இலங்கையில் ரயில்வே திட்டம் தென்கொரியாவுடன் ஒப்பந்தம்

கொழும்பு,செப்.18
கொழும்பிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் நீர்கொழும்பு வரையிலான லைட் ரயில்வே திட்டத்துக்கு ( light rail line) சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்காக இலங்கை, 15 க்கும் மேற்பட்ட தென்கொரிய நிறுவனங்களின் கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுள்ளது.
இதற்காக கொரிய வங்கியிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்படவுள்ளது.
அத்துடன் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து 1 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதி திரட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
"தென்கொரியா மற்றும் மலேசியா உள்ளிட்ட நாடுகள் மேம்பட்ட இணைப்பு காரணமாக விரைவான வளர்ச்சியை அனுபவித்துள்ளன. 30 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை தென்கொரியாவைப் போன்ற நிலையில் இருந்தது என்று இலங்கைத் தூதுவர் ஏ.சாஜ். யு. மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (ஒ,4)

## மகளிரை வலுவூட்டும் நோக்கில் அமெரிக்காவால் நிதியுதவி

கொழும்பு.செப்.18
நாட்டில் சிறு தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு உதவி வழங்குவதற்கும் மகளிரை வலுவூட்டும் நோக்கிலும் அமெரிக்காவால் 40 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் வாழும் மக்களால் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல் 21 தாக்குதல்: 63 பேருக்கு மறியல்

கொழும்பு,செப்.18
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சஹ்ரானின் சகோதரி உள்ளிட்ட 63 பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
காணொலி மூலமாக இடம்பெற்ற வழக்கு விசாரணையில், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
குறித்த தாக்குதலில் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேர் கைது செய்யப்பட்டனர்.
அத்துடன் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரது கணவர் உள்ளிட்ட 4 பேரும் கைது செய்யப்பட்டனர்.
இரு வெவ்வேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 64 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் இரு வழக்கு இலக்கங்களைக் கொண்ட 64 பேரும் காணொலி மூலமாக நடைபெற்ற விசாரணையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் 63 ஆவது சந்தேகநபரான மொஹமட் ஹில்மி விடுவிக்கப்பட்டார். ஏனையவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்[illegible] (ஒ,4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஐ.நா. என்னும் மண்குதிரை


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை விடயத்தில் கொழும்புக்கு எந்த அச்சமும் இல்லை. அதன் பரிந்துரைகளைக் கண்டுகொள்வதோ குறைந்தபட்சம் சட்டை செய்வதோகூட கொழும்புக்குத் தெரியாத விடயங்கள். அதன் உச்சக்கட்டக் காட்சிகள்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 48ஆவது அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

போரின் பின்னரான காலப்பகுதிகளிலும் தமிழர் தாயகத்தில் இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அத்துமீறல்களில் அரசியல் கைதிகளின் விவகாரமும், பௌத்த மயமாக்கலும், தனிச் சிங்களத் திணிப்பும் முதன்மையானவை. இந்த அத்துமீறல்களால் தமிழர்கள் படும் அல்லல்கள் சொல்லிமாளாதவை. இவற்றைத் தடுக்க வலியுறுத்தி புலம்பெயர் அமைப்புக்களும், இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளும் பல்வேறு கடிதங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு அனுப்பிவைத்திருக்கின்றன. பல முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளன. ஆனால், எந்த முறைப்பாடு தனக்கு எதிராகக் குவிந்துள்ளதோ அதை, அதே மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறும்போது நிகழ்த்திக் காட்டுவதென்பது எவ்வளவு பூதாகரமானது. அந்தக் காட்சிகள்தான் தற்போது அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று பலதரப்பட்ட குரல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கையில், அநுராதபுரம் சிறைச்சாலைக்கு துப்பாக்கியுடன் சென்று அங்குள்ள அரசியல் கைதிகளை முழங்காலில் இருக்கவைத்து, பாதணிகளை நாவால் நக்கவைத்து உச்சக்கட்ட அதகளம் புரிந்துள்ளார் துறைசார் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த. அவருடைய இந்த அத்துமீறல்களுக்கு கண்டனக்கணைகள் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் இருந்து குவிந்தன. இந்தக் கண்டனங்கள் தம் கருத்தை - நிலைப்பாட்டை வலியுறுத்தி முடிக்கமுன்னர் இராணுவத்தினரின் அத்துமீறல் வெடுக்குநாறிமலையில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா - வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோவிலில் இந்துத் தெய்வங்களின் சிலைகள் சில காணாமல் போயுள்ளன. இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பௌத்த பிக்குகள் அமரும் இருக்கைகள் அந்தப் பகுதிக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என்றெல்லாம் பல்வேறு குற்றச்சாட்டுக்களை குறித்த பகுதியில் வாழும் மக்களும் ஊடகவியலாளர்களும் அடுக்கியுள்ளனர். ஆக, எந்தப் பௌத்த மயமாக்கலுக்கும் சிங்களத் திணிப்புக்கும் எதிராகத் தமிழர் தாயகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முறையிடுகின்றதோ, அதே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமகாலத்தில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோவிலில் இடம்பெறும் இத்தகைய அடாத்து நடவடிக்கைகளை என்னவென்று சொல்வது.

ஐக்கிய நாடுகள் சபையென்பது சர்வதேச அங்கீகாரம் பெறப்பட்ட 'போலி மேடை'. வெறும் மண் குதிரை. அதனால், இறுக்கமான காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது என்பதன் வெளிப்பாடு தற்போது மெல்லமெல்ல மெய்ப்பிதமாகி வருகின்றது. அது உண்மையும்கூட. அல்லாவிடில் ஒரு நாடு தனக்கு எதிரான பெரியதும் கனதியானதும் முக்கியமானதுமான குற்றச்சாட்டுக்களை அதே சபையின் கண்முன் நிகழ்த்திக்காட்டுமா! (?)




# அரிசி விலைகளில் மாற்றம் செய்ய ஆலோசிக்கும் அரசு

**கொழும்பு, செப்.18**



**அரிசிக் கட்டுப்பாட்டு விலை வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துவதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு மற்றும் கூட்டுறவு அமைச்சு என்பன தீர்மானித்துள்ளன.**

சம்பா மற்றும் கீரி சம்பா ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 103 ரூபாவில் இருந்து 120 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது என்றும், கீரி சம்பாவின் விலை 125 ரூபாவில் இருந்து 145 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நியமிக்கப்பட்ட பின்னர் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது. தற்போது அதில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

# தண்டனை இல்லை என்ற துணிவே லொஹானின் செயலுக்கு காரணம்

## விக்னேஸ்வரன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், செப்.18

அரசு சார்பானவர்கள் எதையும் செய்யலாம், தண்டனை கிடைக்காது என்ற மனோபாவமே லொஹான் ரத்வத்தவின் செயற்பாட்டுக்குக் காரணம். இந்தக் குற்றத்தைப் புரிந்தவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருந்தால் அவர் மீது சட்டம் பாய்ந்திருக்கும். பதவி விலகிவிட்டு சுதந்திரமாகத் திரியும் அவருக்கு, இன்னொரு துணை அமைச்சுப் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது

இந்த அரசின் கீழ் அரச சார்பான அரசியல்வாதிகளுக்கு விதிகள், ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் என்று எதுவுமே கிடையாது என்பது நிதர்சனம். அவர்கள் நினைத்ததைச் செய்ய முடியும். அரச அலுவலர்கள் அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். கட்டுப்பாடின்றி சிறைச்சாலைக்குள் நுழையலாம். ஹெலிகொப்டரில் இரவில் பயணஞ் செய்யலாம். நன்றாகக் குடித்துவிட்டுப் போய் சிறைக்கைதிகளை அவர்களின் சிறைக்கூண்டுகளில் இருந்து வெளியே வரச்செய்து அவர்களுக்கு எந்தத் தீங்கையும் விளைவிக்கலாம் என்றாகிவிட்டது.

தமிழ் மக்களை இழிவுபடுத்துவதை எந்தச் சிங்கள அரசியல்வாதிகளும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. முஸ்லிம்களுக்கும் அண்மையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலையகத் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களும், மலையகத் தமிழ் மக்களும் சிங்களவர்களுடன் சேர்ந்தே இதுவரை காலமும் பயணித்து வந்தனர். இப்போது நிலைமை மாற்றம் அடைந்துள்ளது. பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் இடையே துருவமயமாக்கல் நடைபெறத் தொடங்கியுள்ளது.

லொஹான் ரத்வத்த உடனே கைது செய்யப்படவேண்டும். அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உரிய விசாரணையின் பின் குற்றவாளியாக நிரூபிக்க காணப்பட்டால் அது பறிக்கப்படவேண்டும். உடனே சம்பந்தப்பட்ட பாதுகாப்புக் கமெராக்கள் கையேற்கப்பட்டு பாதுகாப்பில் வைத்திருக்கப்பட வேண்டும். லொஹான் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு பதியப்பட்டாலும் விசாரணையின் போது தமிழ் அரசியற் கைதிகள் சாட்சிகளாக உண்மை கூறினாலும் அவர்களின் சாட்சியம் பக்கச்சார்புடையதென்று கூறி அவரை விடுதலை செய்ய பல நீதிபதிகள் காத்திருக்கக்கூடும் - என்றுள்ளது.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரர் திருமதி. தனபாலசிங்கம் இலங்கைநாயகி

**பிறப்பு : 07.07.1955** **இறப்பு : 14.09.2021**



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல: 352. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் இலங்கைநாயகி 2021.09.14 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோதிநாதன் கமலாம்பிகை தம்பதிகளின் மருமகளும், திரு. சோதிநாதன் தனபால சிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் புனிதவதி, குணபால சிங்கம், காலஞ்சென்ற சிவசோதிநாதன், புஸ்பரதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சோதிமலரின்(லண்டன்) அன்பு மைத்துனியும், அருட்செல்வன் (லண்டன்), வித்தியவாணி (ஜேர்மனி), சத்தியரூபி, முரளிதாசன் (லண்டன்), தனுஷியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாமினி (லண்டன்), தர்மகுமார் (ஜேர்மனி), ஜெயகாந்தன் (அதிபர், யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை), அரசி (லண்டன்), மதியழகன் (CT SCAN பிரிவு போதனா வைத்தியசாலை, யாழ்ப் பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செந்தூரன் (லண்டன்), அபர்ணா (லண்டன்), அஸ்மிகா (லண்டன்), அக்ஷயா (லண்டன்), கஜந்தி (ஜேர்மனி), கஜந்தன் (ஜேர்மனி), காயத்திரி (ஜேர்மனி), கீர்த்தன் (ஜேர்மனி), எழிட்சிகா, தரங்கினி, கஜீபன்(லண்டன்), ஜகிதன் (லண்டன்), லக்சனா (லண்டன்), திவ்யானி (லண்டன்), தருண், வர்ஷனா, கிபிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2021.09.19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 467 1903, 021 222 8695**
**352, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

நாரஹேன்பிட்டி

# மருத்துவமனையில் மீட்கப்பட்ட குண்டு அரசியல்வாதியுடையது?



கொழும்பு, செப். 18

**கொழும்பிலுள்ள நாரஹேன்பிட்டி பகுதியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையின் மலசலகூட பகுதியில் இருந்து மீட்கப்பட்ட கைக்குண்டு, பிரபல அரசியல்வாதியொருவரின் வீட்டிலிருந்து எடுக்கப்பட்டது என்று தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் அளித்துள்ள சாட்சியத்தின் படி இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு 7 பகுதியிலுள்ள அமைச்சர் ஒருவரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இருந்து இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என மேலும் தெரியவந்துள்ளது. இந்த வீட்டின் திருத்தப் பணிகளுக்காக குறித்த சந்தேகநபர் கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை அங்கு தங்கியிருந்தமையும் ஆரம்பக்கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. கட்டடதிருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது குறித்த வீட்டில் எவரும் தங்கியிருக்கவில்லை என்பதுடன், அதற்கு முன்னர் அரசியல்வாதியொருவர் தங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)




## ஒரு மில்லியன் சினோவெக் இலங்கைக்குக் கிடைக்கும்

கொழும்பு.செப்.18

இலங்கைக்கு 1 மில்லியன் டோஸ் சினோவெக் தடுப்பூசியை வழங்க சீனா தீர்மானித்துள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தடுப்பூசி வேலைத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக சீனா இந்த உதவியை வழங்கவுள்ளது என்றும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

சினோவெக் உலகில் அதிகம் பயன்படுத்தப்படும் தடுப்பூசி ஆகும்.

சுமார் 50 நாடுகளில் 1.8 பில்லியன் டோஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 1.4 பில்லியன் டோஸ்கள் மக்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.4)

# சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸார் மீது தாக்குதல்



கொழும்பு.செப்.18

சுற்றிவளைப்பை மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொழும்பு தெமட்டகொடை பகுதியில் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் போதைப்பொருள் சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேரை பொலிஸார் கைது செய்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக விசாரணைகள்!

## சர்வதேச மன்னிப்புச் சபை அழுத்தம்

**கொழும்பு, செப். 18**

**அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகளை துப்பாக்கிமுனையில் மிரட்டிய சம்பவம் குறித்து வெளியாகியுள்ள தகவல்களை சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, இராஜாங்க அமைச்சரை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.**

Amnesty International

இராஜாங்க அமைச்சரை அவரது நடவடிக்கைகளுக்காகப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக்குக்கான இயக்குநர் யாமினி மிஸ்ரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கைதிகள் நடத்தப்படுவது குறித்த எங்களது கரிசனைகள் குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அதிகாரிகள் சித்திரவதை செய்வது மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்துவது குறித்த எங்கள் கரிசனைகள் உண்மையானவை என்பதை இந்த சம்பவம் குறித்த தகவல்கள் புலப்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் குற்றவியல் நடவடிக்கைளில் ஈடுபட்டால் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் நிலை காணப்படுவதையும் நடைபெற்ற சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. எனவே அமைச்சருக்கு எதிராக உடனடி பக்கச்சார்பற்ற பயனுள்ள விசாரணை அவசியம். அமைச்சரை அவரது நடவடிக்கைகளுக்காக பொறுப்புக்கூறச் செய்யவேண்டும்.

லொஹான் ரத்வத்தயின் இந்த நடவடிக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமையை சரிசெய்வதற்கு அரசாங்கம் நல்லிணக்கம் என்ற பெயரில் முன்னெடுக்கும் சிறிய நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ம)

---

# இரும்பு வேலிகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கொழும்பு,செப்.18

அதிவேக நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு இரும்பு வேலிகளைத் துண்டுதுண்டாக வெட்டித் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெய்யந்துடுவ தெவமின்ன பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் அதிவேக நெடுஞ்சாலையிலுள்ள இரும்பு வேலியையே இவர் திருடினார் என்று சப்புகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இரும்புகளை விலைக்குக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் பிறிதொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிவேக நெடுஞ்சாலையின் தொழில்நுட்ப அதிகாரி செய்த முறைப்பாட்டுக்கமையவே இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரையும் மஹர நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-இ)

---

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

## ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,செப்.18

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு இதுவரை முழுமையான தீர்வு கிடைக்கவில்லை. அதனால் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்களுக்கும், கல்வி அமைச்சுக்கும் இடையில் நேற்று முன்தினமும் பேச்சு நடைபெற்றது. அதிலும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை. பேச்சு தோல்வியில் முடிந்தது.

எனவே எங்களது கோரிக்கைகளுக்கு முழுமையான தீர்வு கிடைக்கும் வரையில், தொழிற்சங்க நடவடிக்கை தொடரும். என்றார்.

அதிபர் மற்றும் ஆசிரியர்கள், சம்பள முரண்பாடு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ஒரு மாதங்களுக்கு மேலாக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

---





# இலங்கை - சுவிட்சர்லாந்து விமான சேவை ஆரம்பம்

கொழும்பு.செப்.18

இலங்கைக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையிலான நேரடி விமான சேவை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் இந்த சேவை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வாரத்தின் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் சுவிட்சர்லாந்துக்கான விமான சேவைகள் இடம்பெறவுள்ளன. (ஐ-இ)

---

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்பாடு

கிளிநொச்சி,செப்.18

சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் விழிப்புணர்வுப் பரப்புரை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்தில் காலை 9 மணியளவில் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. உழவியந்திரத்தில் சேதனப்பசளை மேற்கொள்ளும் முறை தொடர்பான காட்சிகள், சேதனக் கரைசல்கள் மேற்கொள்ளும் முறைகள் சேதனக் கரைசல் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டு கிராமங்கள் தோறும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

மாவட்டத்தில் 23 ஆயிரம் மெற்றிக்தொன் சேதனப்பசளை தேவைப்பாடாகவுள்ளது 10 ஆயிரம் தொன் உற்பத்தி செய்வதற்கே இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீதி 13 ஆயிரம் தொன் தேவைப்படுகிறது. எனவே மாவட்டத்தின் சேதனப்பசளை உற்பத்தியை இரட்டிப்பாக்கும் நோக்குடன் மாவட்டத்தின் எல்லா இடங்களிலும் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. என்று பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-113)



---

# இலங்கை - காரைக்கால் கப்பல் சேவை விரைவில்

## இந்தியாவுடன் ஆலோசனை

கொழும்பு,செப்.18

இலங்கை மற்றும் காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பில் இந்தியாவுடன் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குப் பயணித்துள்ள பின்தங்கிய கிராம் பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர், புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமியுடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

சந்திப்பில் இலங்கை மற்றும் இந்திய நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் அவர்களிடையே நல்லுறவை வளர்ப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் கிராமிய அபிவிருத்தி, மற்றும் விவசாயம், கைத்தொழில் சார் முதலீடு மற்றும் கால்நடை துறைசார் மேம்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளனர்.

இவர்களுடன் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர [illegible] அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் [illegible] இணைந்துள்ளனர். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டுநாயக்க

# விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

### தாக்குதல் எச்சரிக்கையையடுத்து நடவடிக்கை




**கொழும்பு, செப். 18**

**கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.**

விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தில் பெறப்பட்ட மின்னஞ்சல் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி விமான நிலையம் மற்றும் அரச கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் தாம் குறிப்பிடும் நான்கு நபர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் இராணுவத்தின் இணையத்தளம் ஹக் செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலமே குறித்த மின்னஞ்சல் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. முன்னதாக மத்தள விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### கொலைச் சம்பவம் தொடர்பில்

## தேடப்பட்டு வந்த சந்தேகநபர் இரு வருடங்களின் பின்னர் கைது



**கிளிநொச்சி,செப். 18**

கொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த இரு வருடங்களாக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் நேற்று முன்தினம் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இயகச்சி பகுதியில் கடந்த 2019ஆம் ஆண்டு கொலைச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஏற்கனவே 4 பேர் கைது செய்யபட்ட நிலையில் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் 5 ஆவது சந்தேகநபரைத் தேடும் நடவடிக்கை பளை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் வைத்து பளை புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-6)

# ஜனநாயகத்தை பலப்படுத்த முறையான நடவடிக்கைகள்

### சபாநாயகர் தெரிவிப்பு



இலங்கையில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு வழிவகுக்கக் கூடிய வகையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இந்திய சபாநாயகர்கள் மாநாட்டின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கலந்து கொண்டமை தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேச ஜனநாயக தினத்தை முன்னிட்டு 'பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள ஜனநாயகத்துக்கு சட்டவாக்கத்தின் பங்கு' எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்திய பிராந்தியங்களின் சட்டமன்ற சபாநாயகர்கள் பலரும் வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த மாநாட்டில் இணைந்திருந்தனர்.

நவீன யுகத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் ஜனநாயக ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்பதை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது உரையின்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை நாடாளுமன்றம் ஆசியாவில் வயது வந்தவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மிகவும் பழமையான நாடாளுமன்றமாகும். உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என்ற வகையில் இந்தியாவின் சட்டப்பேரவை பல்வேறு மத, பல்லின சமூகத்தில் எவ்வாறு செயற்படுகின்றது என்பது அயல்நாடான எமக்கு மாத்திர மன்றி ஜனநாயக ஆட்சியின் விற்பன்னர்களுக்கும் மதிப்பு மிக்க பாடங்களை வழங்குகின்றது என்று சபாநாயகர் தெரிவித்தார்.

பொதுமக்களின் பங்களிப்பு மற்றும் நாடாளுமன்றச் செயற்பாடுகளில் பொது மக்களின் ஈடுபாடுகளை அதிகரிக்கும் நோக்கில் திறந்த நாடாளுமன்றம் என்ற கொள்கையை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதையும் சபநாயகர் தனது உரையின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

புதிதாக உருவாக்கப்பட்ட தொடர் பாடல் திணைக்களத்தின் ஊடாக பொதுமக்களைச் சென்றடைவதற்கு நாடாளுமன்றம் அண்மையில் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடாளுமன்றச் செயற்பாடுகள் பற்றிய அறிவை வளர்ப்பதற்கும், ஜனநாயகத்தை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கும் குறிப்பாக ஜனநாயகத்தின் கொடியை ஏந்தக்கூடிய எதிர்கால சந்ததியினரான பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு இவற்றை விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

தகவல் அறியும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் குழுக்களின் செயற்பாடுகளை அறிக்கையிட ஊடகங்களுக்கு அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் சபாநாயகர் தனது உரையில் மேலும் தெரிவித்தார் - என்றுள்ளது. (ஒ-4)

## எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிப்பு?

**கொழும்பு, செப்.18**

எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன. இதனால் எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இது தொடர்பில் கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவிக்கையில்,

உலக சந்தையில் எரிவாயு விலை உயர்வடைந்துள்ளமையால் எரிவாயு நிறுவனங்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

உள்ளூர்ச் சந்தையில் எரிவாயுப் பற்றாக்குறை இருப்பதை அமைச்சு ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் தற்போது அந்த நிலைமை இல்லை.

அமைச்சில் இருந்து பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய தற்போது எரிவாயு உற்பத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே எரிவாயு நிறுவனங்களுடன் விலை தொடர்பில் அமைச்சு கலந்துரையாடி வருகின்றது. என்றார்.

எரிவாயு பற்றாக்குறை தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து, கொரோனாத் தொற்றுக்கால நெருக்கடிக்கு மத்தியிலும் அண்மையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-ரி1)



# பொலிஸாருக்கு பியர் விற்பனை

### சந்தேகநபர் கைது

**யாழ்ப்பாணம்,செப்.18**

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கே, பியர் விற்பனை செய்தவர் பொலிஸாரிடம் மாட்டினார். இந்தச் சம்பவம் கோப்பாய் செல்வபுரம் பகுதியில் நடந்துள்ளது.

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை வீட்டில் வைத்துக் கைது செய்தனர்.

அவரது வீட்டிலிருந்து 30 பியர் ரின்களும், 9 கால்போத்தல் சாராயமும் மீட்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஒரு பியர் ரின்னை தலா 600 ரூபா வீதம் விற்பனை செய்துள்ளார் என்பது விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. (ஒ-26)

## 623 பொருள்களுக்கான தடை நாடு திரும்புவோருக்கு இல்லை

மத்திய வங்கியால் 623 பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடை வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்குப் பொருந்தாது என்று நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக்கல தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியால் அண்மையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் குறிப்பிட்ட பொருள்களைக் கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சமூக ஊடகங்களில் தகவல்கள் பகிரப்பட்டிருந்தன.

இதற்குப் பதிலளித்துள்ள நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக்கல,

623 பொருள்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மக்கள் தவறாகப் புரிந்துள்ளனர்.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு இந்தத் தடை உத்தரவு பொருந்தாது. இது இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு மட்டுமே -என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புரட்டாதிச்சனி விரத மகிமைகள்

இன்று (18.09.2021) முதலாவது புரட்டாதிச் சனிக்கிழமை

மதுரகவி காரை.எம்பி அருளானந்தன்

ஒவ்வோர் ஆண்டும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற சனிக்கிழமைகள் தோறும் சனிபகவானை நினைத்து மனம்,வாக்கு,மெய்யால் வழிபாடு இயற்றுகின்ற மரபை இந்துக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இக்காலப்பகுதியில் அதிகாலை வேளையில் எழுந்து நீராடி தோய்ந்துலர்ந்த ஆடைகள் அணிந்து அடியவர்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவர். சைவ ஆசார முறைப்படி உணவு சமைப்பர். வாழை இலையில் பழம்,பாக்கு,வெற்றிலையோடு அன்னமிட்டு அதற்கு உகந்த கறிகளைச் சேர்த்து சனீஸ்வரனுக்கு நிவேதனம் செய்வர். காகத்துக்கும் சாதம் வைத்து வழிபாடு இயற்றுவர்.

**சனீஸ்வரன்**

சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவரே சனீஸ்வர பகவான். இவர் காசிக்குச் சென்று தன் பெயராலேயே ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து தினமும் வழிபாடு இயற்றி வந்தார். அதன் பயன் கொண்டே கிரக பதவியையும் அடைந்தார். அது மாத்திரமன்றி சிவனிடமிருந்து ஈஸ்வர பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

**கிரகங்களுள் ஈஸ்வரப்பட்டம் பெற்றவர்**

கிரகங்களுள் ஈஸ்வரப்பட்டம் பெற்ற பெருமைக்குரியவராகவும் , தாமத குணமுடையவராகவும் சனீஸ்வரன் திகழ்கின்றார். மந்தன், பிணிமுகன், முதுமகன், முடவன், காரி என்னும் நாம காரணங்கள் கொண்டு அழைக்கப்படுகின்றார். சனீஸ்வரனுக்குப் பிரியமான உலோகம் இரும்பு , அதுவிதமே பிரியமான மணியாக நீலத்தையும், தானியங்களுள் எள், மலர்களுள் கருங்குவளை மற்றும் சுவை உணர்வில் கசப்பையும் விரும்பி ஏற்றுக் கொள்கின்றார்.

**கருணைக்கடலான சனீஸ்வரன்**

எள் கலந்த உணவிலும் நல்லெண்ணெய் கொண்டு ஒளியூட்டப்படும் விளக்கிலும் அதீத விருப்புடையவர் கருணைக்கடலானவர், பயமற்றவர் , விரும்பிய பயன்களை அருள்வதில் காமதேனு போன்றவர் காலசக்கரத்தைப் பிளப்பதில் கதிரவனைப் போன்றவர்.

**நவக்கிரகங்களில் சக்தி வாய்ந்தவர்**

ஸ்ரீசனிபகவான் நவக்கிரகங்களில் மிகவும் சக்தி வாய்ந்தவர். தனக்கென்று தனி ஆதிக்கமும் கொண்டவர். தன் பார்வையினாலேயே நன்மை தீமைகளுக்கு ஏற்ப பலன்களை அளிக்கும் வல்லமை உடையவர். வில்லைப் போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவர். நீலநிற மேனி உடையவர், முடி தரித்தவர், சூலமும் வில்லும் விரதமும் , அபயமும் கொண்ட நான்கு கரங்களை உடையவர், கரு மலரையும் நீல மலர் மாலையையும் புனைபவர், கரு நிறக்குடையும் கொடியும் கொண்டவர், மேருவை வலம் வருபவர்.

**சஞ்சாரம் செய்பவர்**

வாழ்க்கையில் ஒருவருக்குப் பொங்குசனி வந்து விட்டால், பொன்னும் பொருளும் வந்து சேரும். மங்கு சனி வந்து விட்டால் நோய் நொடி துன்பங்கள் ஏற்படும், ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஆயுள் காலம் முடிவடைவதற்குள் அவர்களுடைய ராசியில் ஏழரை வருட காலம் சஞ்சாரம் செய்பவராக சனீஸ்வர பகவான் விளங்குகிறார்.

**புரட்டாதிச்சனிக்கிழமை வழிபாடு**

புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் சனிபகவானை வழிபாடு செய்தல் சிறப்பானதாகும். சனிக்கு அதிபதி விஷ்ணு ஆகையால் விஷ்ணு ஆலயங்களில் விசேட வழிபாடு செய்து வருவது நற்பலனை அளிக்கின்றது.

**சனிதோசத்தை விலக்கலாம்**

எள்ளு, கறுப்புத்துணி, நல்லெண்ணெய் முதலியவற்றை சனிக்கிழமைகளில் தானம் செய்வதனால் எமக்கு ஏற்பட்ட சனிதோசம் விலகி விடுகின்றது. அத்துடன் செப்புப் பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டுத் தமது முகத்தை அதில் பார்த்துவிட்டு அதனையும் தானம் செய்யலாம். கறுப்புத்துணியில் எள்ளுப் பொட்டலம் கட்டி அதனைச் சிறிய மண்சட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு தீபமாக ஏற்றி வழிபட்டு சனிதோசத்தை போக்கிக் கொள்ளலாம்.



**சனிநீராடு**

ஏனைய விரதங்களுக்கு எண்ணெய் முழுக்கு விலக்கப்பட்டுள்ளது, சனிவிரதத்துக்கு மட்டும் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும், சனீஸ்வர பகவானின் வாகனம் காகம் ஆகையால் காகத்திற்கு உணவளிப்பதன் மூலம் சனிபகவான் தரும் கெடுபலன்களிலிருந்து விடுபடலாம். ■

# இந்துக்களை ஒழிப்பதற்கு மன்னார் ஆயர் முயற்சியாம்

## ஈழத்து சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் கொதிப்பு

யாழ்ப்பாணம்,செப்.18

மன்னார் மாவட்டத்தில் இந்துக்களை இல்லாதொழிப்பதற்காக, வன்முறையைத் தூண்டி, மன்னாரை மீண்டும் குருதி வெள்ளமாக்கும் முயற்சியை ஆயர் கைவிட வேண்டும் என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கையில்,

வரலாற்றில் மிக மோசமானவராகப் போப்பாண்டவர் ஆறாம் அலெக்சாண்டரைக் கூறுவார்கள். அவரைப்போலவே இன்றைய மன்னார் ஆயரும் மிக மோசமான ஆயர் என்ற பெயரை எடுக்க விரும்புகிறாரா? மன்னாரைக் கைப்பற்றுக என்று ஆணையிட்டவர் போப்பாண்டவர் ஆறாம் அலெக்சாண்டர். அ[illegible] ஆணையை ஏற்றுப் பிரான்சிஸ் சேவியர் என்ற கொடுமையாளரை அனுப்பியவன் போர்த்துக்கேய மன்னன் முதலாம் இம்மானுவேல்.

நூற்றுக்கணக்கில் சைவர்களைக் கொலை செய்து புதைத்த மன்னார் நகரத்தின் புதைகுழி 420 தொடக்கம் 480 ஆண்டுகள் வரை பழமையானது என்று தொல்லியலாளர் கூறுகின்றனர்.

அவ்வாறே மன்னாரில் சைவர்களை ஒழிக்க முயல்பவர் இன்றைய மன்னார் ஆயர். வீறு கொண்டு எழுந்த முதலாம் சங்கிலியன், கொடுமையாளனான பிரான்சிஸ் சேவியரை ஓட ஓட விரட்டினான் என்பதை இன்றைய மன்னார் ஆயர் மறந்து விடக்கூடாது.

மடு பிரதேச செயலகப் பிரிவு சைவப் பெரும்பான்மைப் பூமி, சிவபூமி. பரப்புக் கடந்தானில் உள்ள பசுஞ்சோலையின் [illegible] பிள்ளையார் சிலையை எடுத்து விட்டு, அ[illegible] துறவி அந்தோனியார் சிலையை வைக்க முயன்ற கொடுங்கோலர்களை அனுப்பியவர் மன்னார் ஆயர்.

செட்டிக்குளத்தில் பிள்ளையார் கோயிலுக்கு முன்பு அந்தோனியார் சிலையை நிறுவிய ஆயரின் அடியாள்களைச் சைவர்கள் மறக்கவில்லை.

அந்தச் சிலையை வெற்றிகரமாக அகற்றினோம். அங்கே விவேகானந்தர் சிலையை நிறுவினோம்.

1998 ஆம் ஆண்டு சிலாவத்துறை பிள்ளையார் கோயில் வாயிலில் மரியாள் சிலையை நிறுவிய பாதிரியாரையும், அடியாள்களையும் கண்டுபிடித்தனர்.

மரியாள் சிலையை அகற்றினர். இன்று வரை அந்தப் பாதிரியாரையும், அடியாள்களையும் காணவில்லை.

பரபபுக்கடந்தானில் சிவபூமியான மடுப் பிரதேசத்தில் பிள்ளையார் சிலையை அகற்றும் [illegible] அடியாள்களுக்குக் [illegible] மன்னார் ஆயர்.

திருக்கேதீச்சர மஹா சிவராத்திரி வளைவை உடைக்கவும் நந்திக்கொடியை காலால் மிதிக்கவும் பாதிரியாருக்கும், அடியாள்களுக்கும் துணிவைக் கொடுத்தவர் மன்னார் ஆயர்.

முதலாம் சங்கிலியன் இன்று இல்லை. விடுதலைப்புலிகள் இன்று இல்லை. எனவே வேட்டையாடலாம், சேட்டை விடலாம் என்று மன்னார் ஆயர் துணிந்து நிற்கிறார்.

எனவே அவரை எச்சரிக்கின்றேன். தமிழரைப் பிளவுபடுத்தும் முயற்சியை அவர் கைவிட வேண்டும்.

மடுவில் கண்ணகை அம்மன் கோயிலை [illegible], மாந்தையில் திருக்கேதீச்சரத்தையும் உடைத்தது போன்று தமிழ் மரபு அடையாளங்களைத் தொடர்ந்து உடைக்கலாம், அழிக்கலாம் என்று மன்னார் ஆயர் கருதுவாராயின் அதற்காக ஆயர் வருந்த வேண்டிய காலம் விரைவில் வரும். என்றார். (ஓ- 4,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## twitter

mohanram.ko@

அழகுபடுத்திக் கொள்வதில்
தவறில்லை
அழகு 'படுத்திக்
கொல்வதுதான் தவறு

ச ப் பா ணி@

துணிக்கடையில் ஒரே
இடத்தில் கொஞ்ச நேரம்
நின்னா..நம்மை சேல்ஸ்
மேனாவே நம்பிடுறாங்க..


Narumanam@

'உருமாறிய'
கொரோனாவைக் கண்டு
மிரண்டது போய்...
'உருமாறிய' மாணவர்களும்,
'உருமாறிய' ஆசிரியர்களும்
ஒருவரை ஒருவர் பார்த்து
மிரளப் போகிறார்கள்

ஏழைக்கு உணவு தட்டுப்பாடு



பணக்காரனுக்கு உணவு கட்டுபாடு



# ஒரேநாளில் வெளியாகின்றன ஆர்யாவின் இருபடங்கள்

நடிகர் ஆர்யா நடிப்பில் உருவாகியுள்ள இரண்டு படங்கள் ஒரே நாளில் வெளியாகவுள்ளன என தகவல்கள் கசிந்துள்ளன.

நடிகர் ஆர்யா அண்மையில் பா.ரஞ்சித் இயக்கத்தில் நடித்த 'சார்பட்டா பரம்பரை' படம் வெளியாகிப் பெரு வரவேற்பைப் பெற்றது.

இந்த நிலையில் அடுத்ததாக இயக்குநர் ஆனந்த் சங்கர் இயக்கத்தில் 'எனிமி' படத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தில் விஷால் ஹீரோவாகவும் ஆர்யா வில்லனாகவும் நடித்துள்ளனர்.

இந்தத் திரைப்படம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14 ஆம்திகதி ஆயுத பூஜை அன்று வெளியாகவுள்ள நிலையில் ஆர்யாவின் அடுத்த படமான சுந்தர் சி இயக்கியுள்ள 'அரண்மனை 3' அதே தினத்தில் வெளியாகவுள்ளது என தகவல்கள் வெளிவந்துள்ளன.

அதன்படி இரண்டு திரைப்படங்களும் திரையரங்குகளில் ஒரே நாளில் வெளியாகவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது




இனிமேல் மஞ்சள், அங்கர் மாதிரி உங்களையும் பதுக்கல் சாமானா ப்ரொமோட் பண்றேன்




மாப்ள உங்க நாட்டைப் பிடிச்சிருக்கிறவன் பூரா கொலைகாரனுங்க..

நீ எதுக்கும் கவலைப்படாத உனக்கு நான் இருக்கேன்..

வேற நாட்டுக்கு ஃப்ளைட்ல தொங்கிட்டுப் போகும்போது எங்களையும் எப்படியாச்சும் கூட்டிட்டுப் போய் காப்பாத்துடா..

# சிந்தனைகள் வெவ்வேறு

மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள். ஒருவரின் கை ரேகை போல் இன்னொருவரின் கைரேகைகூட இல்லை. அப்படியிருக்கும்போது ஒரே மாதிரி சிந்திப்பதற்கு எல்லாம் வாய்ப்பே இல்லை. ஒருவேளை மனிதர்கள் அனைவரும் ஒரேமாதிரி சிந்தித்தால் என்ன நடக்கும்?


நல்லவிதமாகச் சிந்தித்தால் யாரும் பசியால் வாடமாட்டார்கள். யாரும் துன்பப்படமாட்டார்கள். எல்லோரும் சமமாக மதிக்கப்படுவார்கள். எங்கும் அன்பும் மகிழ்ச்சியும் நிரம்பியிருக்கும்.

ஒரு வேளை கெட்டவிதமாக சிந்தித்தால் என்ன ஆகும்?

நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. ஒரே ஒரு ஹிட்லரையே இந்த உலகத்தால் தாங்க முடியவில்லை. அவரைப் போல் அனைவரும் சிந்தித்தால் என்ன ஆகும்?

மனிதர்கள் வெவ்வேறு விதமாகச் சிந்திப்பதால்தான் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கிறது. முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன. கண்டுபிடிப்புக்கள் நிகழ்கின்றன.





# இன்றைய நாள்

**மேடம்:** முடிந்துவிடும் என நினைத்த விஷயத்தில் தடைகள் வரலாம். முயற்சிகளால் முன்னேற்றம் அதிகரிக்கும் நாள். பரபரப்பு கூடும். போன் மூலம் எதிர்பாராத நல்ல செய்தி வரும். மனச்சோர்வு நீங்கும்.

**இடபம்:** பல நாட்கள் விரும்பிய விஷயம் இன்று நடந்து மகிழ்வீர்கள். பெற்றோரின் உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உடல் நலம் சீராகி உற்சாகம் ஏற்படுத்தும்.

**மிதுனம்:** தவறாகப் பேசியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். வாழ்வில் முன்னேற நியாயமான புதிய வழியைக் கையாள்வீர்கள். பணியாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். உழைப்பு கூடும்.

**கடகம்:** விரும்பிய விஷயம் கிடைக்கும். பணக்கவலை தீரும். சந்தோஷ அதிர்ச்சி தரும் செய்தி வரும். வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** பணியிடத்தில் சாதனைகள் செய்து காட்டுவீர்கள். இளமை திரும்பும். வர வேண்டிய பாக்கித்தொகை வசூலாகும். மற்றவர்கள் சார்பில் நீங்கள் கொடுத்திருந்த வாக்கால் சிரமம் ஏற்படும்.

**கன்னி:** வம்பு பேசாதீர்கள். எந்தப் பெரிய முடிவும் எடுக்க வேண்டாம். கவலைகள் சற்றுக் குறையும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நட்பால் நல்ல விஷயம் நடைபெறும்.

**துலாம்:** ஆதாயம் உண்டு. கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். பணியிட சூழ்நிலை சாதகமாக இருக்கும். உங்களின் செல்வாக்கு கூடும். குடும்ப சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும்.

**விருச்சிகம்:** வருமானம் சீராகி உற்சாகப்படுத்தும். ஆன்மிக ஈடுபாடு வரும். அனுபவம் மிக்கவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பர். நண்பர்கள் ஆதரித்து உதவுவார்கள்.

**தனுசு:** அரசு அதிகாரிகள் சில விஷயங்களை முடித்துக் கொடுப்பர். வருங்காலத்திற்காக சிறிது சிறிதாகச் சேமிக்க முற்படுவீர்கள். பொருள் சேர்க்கை ஏற்படும் நாள்.

**மகரம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மனம் நிறையும். தந்தை உடல் நலனில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். புகழ் மிக்கவர்களின் புதிய ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** பூமி யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பணி சம்பந்தமாக மாற்றங்கள் பற்றி செய்தி வரும்.

**மீனம்:** விரும்பிய விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். யாரையும் விரோதியாக நினைக்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்தியநிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.



# கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகளுக்கான சிகிச்சைமுறைகள்




## ஆண்கள்:

கருத்தரித்தல் தாமதமடைவதற்கு ஆண்களுக்கான காரணிகள் .ஆரம்பகட்ட சுக்கிலப்பாய பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் அடுத்த படிநிலைக்குரிய மருத்துவக் கணிப்பீடு மற்றும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும். பின்னர் இயலுமானவரை காரணம் கண்டறியப்பட்டுச் சிகிச்சைமுறையானது மேற்கொள்ளப்படுகிறது. சுக்கிலப்பாய அறிக்கையில் விந்துக்களின் எண்ணிக்கை, தரம், உருவவியல், அசையும் தன்மை உட்படப் பல்வேறு காரணிகள் அறிக்கைப்படுத்தப்பட்டு மருத்துவ ஆலோசனையின் அடிப்படையிற் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். பெண்களைப்போல இல்லாமல் ஆண்களுக்கான சிகிச்சைமுறைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படும். அவ்வாறான சில முக்கிய சிகிச்சைமுறைகள் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

ஆண்களில் கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணிகளுக்கான சிகிச்சை முறைகளில் வாழ்க்கைமுறையை மாற்றியமைத்தல் முக்கியமானதாகும். ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையினால் விந்தணுக்களின் உற்பத்தி மற்றும் சுக்கிலப்பாயத்தின் தரம் பாதிக்கப்படுவதாக விஞ்ஞானரீதியான ஆய்வுகளின் அடிப்படையில் நம்பப்படுகின்றது. அதீத மதுப்பாவனை மற்றும் சிகரெட் புகைத்தல் போன்றன சுக்கிலப்பாய காரணிகளில் எதிர்மறையான தாக்கம் செலுத்துவதால் மதுபாவனை மற்றும் புகைப்பிடித்தலை தவிர்த்தல் மிக அவசியமானதொன்றாகும்.

அதீத உடல்நிறையானது சுக்கிலப்பாயத்தின் தரத்தினைப் பாதிப்பதால் உடல் நிறையைக் குறைக்கும் உணவுப் பழக்க வழக்கங்களோடு மேலும் உடற்பயிற்சி செய்து ஆரோக்கியமான உடல் நிறையைப் பேணவேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் மனஅழுத்தத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளை தம்பதியினர் கவனத்தில் எடுக்கவேண்டும்.

சில தொழில்கள் நடவடிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறையானது (தூர இடங்களுக்கான வாகனச்சாரதிகள்) விதைகள் மற்றும் விதைப்பையின் வெப்பநிலை அதிகரிப்பதனால் சுக்கிலப்பாயத்தின் தரமானது பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு அதிக வெப்பநிலை எதிர்கொள்ளும் தொழில் செய்பவர்கள், அந்தத் தொழிலை தற்காலிகமாகவேனும் மாற்றம் செய்தல் பொருத்தமானது. இவ்வாறான வாழ்க்கைமுறை மாற்றங்களே ஆரம்பகட்ட மற்றும் முதன்மையான சிகிச்சை முறையாகக் காணப்படுவதால், தம்பதியினர் ஆரோக்கியமான வாழ்க்கைமுறையின் அவசியத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆண்களுக்கான சிகிச்சை முறையில் சில மருந்துகளும் பயன்படுத்தப்படுவது உண்டு. இம்மருந்துகள் பொதுவாகச் சுக்கிலப்பாயத்தின் தரத்தைஅதிகரிப்பதாகும். சில விற்றமின்கள் (Vitamien C , E ) மற்றும் துணை நொதியம் (Co - enzyme Q) போன்றன பயன்படுத்தப்பட்டாலும் கருத்தரித்தல் வீதத்தினை அதிகரிக்கும் என்பதற்கான விஞ்ஞான ரீதியான ஆதாரங்கள் கண்டறியப்படவில்லை.


சுக்கிலப்பாய அறிக்கையில் விந்தணுக்களின் எண்ணிக்கை மற்றும் அசையும் தரம் குறைவாகக் காணப்படும் ஆண்களுக்கு கருப்பையினுள் விந்தணுக்களை செறிவாக்கி உட்செலுத்தும் சிகிச்சை முறையானது (IUI) பரிந்துரைக்கப்படுகிறது. செறிவான அசையும்தன்மை கூடிய விந்தணுக்களானவை கருப்பையினுள் நேரடியாக உட்செலுத்தப்படுவதால் கருக்கட்டலுக்கான சந்தர்ப்பம் அதிகரிக்கும். இந்தச் செயன்முறையானது ஒரு வினைத்திறனான,செலவு குறைந்த, ஒப்பீட்டளவில் பாதிப்புக் குறைந்த, செயன்முறை யாகக் கருதப்படுகிறது. விந்தணுக்களின் எண்ணிக்கையானது மிகமிகக் குறைவாகக் காணப்படல் ,விந்தணுக்களின் அசையும் தன்மை மிகக் குறைவாகக் காணப்படல் என்பவற்றின் போது செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சிகிச்சைமுறைகளில் ஒரு முட்டையின் குழியவுருவினுள் ஒரு விந்தணுவை உட்செலுத்தி கரு உருவாக்கப்படுகின்றது.(ICSI). ஆண்களுக்கான காரணிகளால் கர்ப்பந்தரித்தல் தாமதமடையும் தம்பதியினரில் இந்தச் சிகிச்சை முறையானது வெற்றிகரமான ஒரு சிகிச்சைமுறையாக புதுப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இறுதியாக ஆண்களுக்கான சிகிச்சை முறைகளில் விந்தணுக்கள் உற்பத்தியானது மிகவும்



பாதிக்கப்பட்டு, விந்தணு இல்லாத சந்தர்ப்பங்களில் தானமாகப் பெறப்பட்ட விந்துக்களின் மூலமாக (Donour )IUI சிகிச்சை அல்லது 'IVF' சிகிச்சை மேற்கொள்ளலாம்.

ஆண்களுக்கான காரணிகளால் கருத்தரித்தல் தாமதமடைவதற்கான சந்தர்ப்பங்களும் அண்ணளவாக 30 % ஆகவே காணப்படுகின்றது. எனினும் சிலசந்தர்ப்பங்களில் கராரணமானது கண்டறியப்படாமலும் போகலாம். ஆனால் வாழ்க்கை முறையின் மூலமும் சிலசிகிச்சை முறைகளின் மூலமும் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

**IUI (கருப்பையினுள் செறிவாக்கப்பட்ட விந்துக்களைச்**



**செயற்கையாக உட்செலுத்தல்)**

நன்கு செறிவாக்கப்பட்ட விந்துக்களை சிறியகுழாய் மூலம் (catheter இனால்) கருப்பைவாசலினூடாக கருப்பையினுள் உட்செலுத்தும் செயற்கைமுறைக் கருக்கட்டல் முறை 'IUI' ஆகும். இது உரியமுறை மருத்துவக் கண்காணிப்புக்களினுடாக,எளியமுறையில் ,பாதுகாப்பாகக் குறைந்த செலவில் மேற்கொள்ளப்படும் ஒரு சிகிச்சைமுறையாகும்.

இந்தச் சிகிச்சைமுறையில் செறிவாக்கப்பட்ட விந்துக்கள் கருப்பைவாய் அல்லது கழுத்து (cervix) பலோப்பியன் குழாய் மற்றும் கருப்பை என்பவற்றினுள் நேரடியாக உட்செலுத்தப்படலாம். எனினும் கருப்பையினுள் விந்து களை நேரடியாக உட்செலுத்தும் முறையானது (IUI) மற்றைய இரு முறைகளை விட வினைத்திறனும் ,அசௌகரியமும் குறைவாகக் காணப்படும். இச் சிகிச்சைமுறையானது விந்துக்களின் செறிவு சுக்கிலப்பா யத்தில் குறைவாகக் காணப்படுதல்,காரணங்கள் எதுவுமின்றி கருத்தரித்தல் தாமதமடைதல் ,அடிப்படை மருத்துவ முறைகள் வெற்றியளிக்காமை மற்றும் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் தம்பதிகளில் மேற்கொள்ளப்படும் எளிய சிகிச்சை முறையொன்றாகும்.

பெரும்பாலும் கருத்தரித்தலில் தாமதமடையும் தம்பதிகளில் இந்தச்சிகிச்சைமுறை பயன்பட்டாலும் ,சில கருப்பைவாய் பிரச்சினைகள் (cervical atresia, cervicitis), கிருமித் தொற்று, பலோப்பியன் குழாய் அடைப்பு போன்ற சில சந்தர்ப்பங்களில் இந்தச் சிகிச்சை முறையானது பயன்படுத்தப்படுவதில்லை. ஆதலால் இந்தச் செயன்முறைக்கு முன் தெளிவான மருத்துவக் கணிப்பீடு அவசியம்.

இந்தச் செயன்முறை மூலம் மிகஅரிதாகவே பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. உதாரணமாக இடுப்புக்குழியில் கிருமித்தொற்று ஏற்படுதல் , சூலகம் அதிகமாகத் தூண்டப்படுதல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பங்கள் தங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தச்சிகிச்சை முறையில் ஒரு படி நிலையில் பயன்படுத்தப்படும் மருந்துகளாலேயே சூலகம் அதிகமாகத் தூண்டப்படலும், ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பங்கள் தங்குதலும் ஏற்பட வாய்ப்புள்ளது.

IUI செயன்முறையின் முதற்படியாக சூலக முட்டைகள் விருத்தி செய்யப்படும். இவை மருந்துகள் மூலம் (clolphene citrate) மற்றும் தேவையேற்படின் ஊசி மூலமாகவும்(FSH) தூண்டப்படுகிறது. முட்டை விருத்தியடையும் போது ஸ்கான் முறை மூலம், முட்டை விருத்தியானது, அவதானமாகக் கணிப்பிட்டு உறுதிசெய்யப்படவேண்டும்.

சாதாரணமாக 10-13 நாள்களில் முட்டை விருத்தியடைந்து விடுகிறது. அதன் பின்னர் முட்டை வெளியேற்றத்தை தூண்டும் காரணியானது உட்செலுத்தப்பட்டு 34-36 மணித்தியாலங்களின் பின்பு செறிவாக்கப்பட்ட விந்துகள் உட்செலுத்தப்படும். இந்தச்சிகிச்சையின் பின்னர் 10-15 நிமிடஓய்வு வழங்கப்படும்.

IUI சிகிச்சையானது ஒரு மாதவிடாய்ச் சக்கரத்தில் ஒருமுறை மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட IUI சிகிச்சையானது விஞ்ஞான ரீதியாக எந்தவிதமான அனுகூலங்களையோ அல்லது கருத்தங்கல் வீதத்தை அதிகரிக்காததுடன் அதிகளவான பணவிரயத்தையும் ஏற்படுத்தலாம். மேலும் IUI சிகிச்சையானது அதிகமாக 6 தரம் மட்டுமே, அதாவது 6 மாதவிடாய்ச் சுற்றுகளுக்கு அதிகமாக மேற்கொள்ளப்படல் விஞ்ஞானரீதியாகக் கருத்தரித்தலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது எனக் கூறப்படுகிறது. அத்துடன் 6 முறை IUI செயன்முறை மூலம் கருத்தரிக்காத தம்பதியினர், அடுத்தபடியான மேம்பட்ட சிகிச்சை களுக்கு செல்வது பொருத்தமானது. IUI சிகிச்சையானது பொருளாதார வளர்ச்சி குறைவான இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பொதுவாக மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறையாகக் காணப்பட்டாலும் கருத்தரித்தல் தாமதமடைந்த காலம், பெண்ணினுடைய வயது, விந்துக்களின் அளவும் தரமும் , சூலகத்தினுள் உள்ள முட்டைகளின் வினைத்திறன் போன்ற பல்வேறு காரணிகள் இந்தச் சிகிச்சைமுறை யின் வெற்றியைத் தீர்மானிக்கின்றன. ஆகவே தெளிவான மருத்துவக் கணிப்பீட்டில் இந்தச் சிகிச்சைமுறைக்குப் பொருத்தமான தம்பதியினரை சரியானமுறையில் தெரிவுசெய்வதன் மூலம் இலகுவான,செலவுகுறைந்த இந்தச் சிகிச்சைமுறை மூலம் அதிஉச்சப் பயன்பாட்டினைப் பெறமுடியும்.



**குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் முட்டாள் அல்ல

## பதவி விலகிய லொஹான் ஜனாதிபதி, பிரதமருக்கு விளக்கம்



**கொழும்பு, செப்.18**

**தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் மறுக்கிறேன் என்று தெரிவித்துள்ள இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, சிறைச்சாலைக்குள் அவ்வாறு நடந்து கொள்ள தான் முட்டாள் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.**

கடந்த 12ஆம் திகதி அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளுக்குள் மதுபோதையில் தனது நண்பர்களுடன் நுழைந்த லொஹான் ரத்வத்த, இரு தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் முழந்தாளிட வைத்து அச்சுறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதையடுத்து எழுந்த சர்ச்சைகள் மற்றும் அழுத்தங்களால் சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து லொஹான் ரத்வத்த விலகினார்.

தற்போது ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள லொஹான் ரத்வத்த, என் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் மறுக்கிறேன். அவ்வாறு நடந்துகொள்ள நான் முட்டாள் அல்ல. சிறைச்சாலைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு சோதனையிடக் கூடிய சிறப்பதிகாரம் எனக்கு உண்டு. அதன் அடிப்படையில் வழமையாக சோதனைக்காக செல்வது போன்றே அன்றைய தினமும் சென்று இருந்தேன். அநுராதபுரம் சிறைச்சாலைக்கோ, வெலிக்கடை சிறைச்சாலைக்கோ மது போதையிலோ, நண்பர்களுடனோ போகவில்லை. அங்கு நான் யாரையும் அச்சுறுத்தவும் இல்லை.

வெலிக்கடை சிறைச்சாலை தூக்கு மேடையையும் சோதனை நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே பார்வையிட்டேன். இந்த உண்மையை பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் உணர வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில், அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்பேற்று தனது பதவியில் இருந்து லொஹான் ரத்வத்த விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

## இணையவழி கதையாடல்

யாழ்ப்பாணம், செப்.18

இணையவழி புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடலின் 15ஆம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.

புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை ஆசிரியர் ந.குகபரன் "ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் தமிழ் நாடக முயற்சிகள்" என்னும் தலைப்பில் கதையாடவுள்ளார்.

நிகழ்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் சூம் செயலி இலக்கம் 647334 8261, கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும் என்று புத்தாக்க அரங்க இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி2)



## பழமரக் கன்றுகள் வழங்க நடவடிக்கை

கொழும்பு, செப்.18

சுற்றுச்சூழல் அமைச்சால் பொது மக்களுக்கு பழம் தரும் மரக்கன்றுகள் மற்றும் பிற மரக்கன்றுகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

கொரோனா நெருக்கடியால் விவசாயிகளும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனையவர்களும் சிரமங்களை எதிர்கொள்வதால் அவர்களிடமிருந்து மரக்கன்றுகளைக் கொள்வனவு செய்து மீண்டும் பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்துக்காக 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## தனிமைப்படுத்தலை மீறிய குற்றச்சாட்டில் 816 பேர் கைது

கொழும்பு, செப்.18

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் 816 பேர் கைது செய்யப்பட்டதுடன் 77 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 73 ஆயிரத்து 894 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் உள் நுழையும் பகுதியில் பயணித்த 10 ஆயிரத்து 93 பேரும் 602 வாகனங்களும் மற்றும் வெளியேறும் பகுதிகளில் பயணித்த 917 பேரும் 548 வாகனங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-இ)

## ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தலா? 119 அல்லது சி.ஐ.டிக்கு அறிவிக்கவும்



இணைய வழிக் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் வந்தால் 119 அல்லது சி.ஐ.டி.க்கு அறிவிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைய வழிக் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கற்பித்தல் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாம் என எவராவது மிரட்டினால், அவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கோ அல்லது 119 என்ற இலக்கத்துக்கோ அறிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு தொடர்பான சட்டத்தை உடனடியாகவும் சரியான முறையிலும் அமுல்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வுப் பெற்ற) சரத் வீரசேகர குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ-இ)

## கொள்கலன்கள் விடுவிப்பு முக்கிய அதிகாரி கைது!

சதொச நிறுவனத்தின் நிதிப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு வெள்ளைப்பூண்டுக் கொள்கலன்களை லங்கா சதொசவுக்கு வழங்கும் போர்வையில் வேறு ஒரு வர்த்தகருக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் அந்த கொள்கலன்களை இறக்குமதி செய்த நிறுவனம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தது.

இந்தக் கொள்கலன்களை இறக்குமதி செய்த நிறுவனம், தான் இறக்குமதி செய்த 18 கொள்கலன்களில் 2 கொள்கலன்கள் திருட்டுத்தனமாக துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டு, துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு கொள்கலன்களிலும் இருந்த வெள்ளைப்பூண்டு திருட்டுத்தனமாக வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை நுகர்வோர் விவகார அதிகார சபை மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்தது. அதன் தொடர்ச்சியான விசாரணைகளின் அடிப்படையிலேயே சதொச நிறுவனத்தின் நிதிப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

## கறுப்புப் பூஞ்சை நோயாளர்களை கண்டுபிடிக்க வசதிகள் இல்லை

கறுப்புப் பூஞ்சை நோயாளிகளை அடையாளம் காண்பதற்குரிய, சோதனைகளை முன்னெடுப்பதற்கு போதுமான வசதிகள் இல்லை என்று மருத்துவர் ப்ரிமாலி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இதுவரை இந்த நோயால் எவரும் உயிரிழக்கவில்லை.

இந்த நோயின் அறிகுறிகள் மூக்கின் இருபுறமும் கருமையாவதும், கண்களைச் சுற்றி கறுப்பு பூஞ்சை பரவுவதும் ஆகும்.

இவற்றைக் கண்டறிய நம்மிடம் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனை வளங்களே உள்ளன. எனவே, நாம் கொரோனாத் தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கறுப்புப் பூஞ்சை நோய் பரவாமல் தடுக்க முடியும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களை அறுவைச் சிகிச்சை மூலம் ஓரளவுக்கு காப்பாற்றும் சாத்தியம் உள்ளது. ஆனால் சில நோயாளிகள் அடையாளம் காணப்படவில்லை. ஏனெனில் நோயைக் கண்டறிய திசு சோதனை தேவைப்படுகின்றது. அத்துடன் இந்தச் சோதனைக்கு மயக்க மருந்து தேவைப்படுகின்றது.

கொரோனாவுக்கான சில மருந்துகள் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலவீனப்படுத்துகின்றன. எனவே, நீங்கள் கொரோனாவுக்கு ஏதேனும் சிகிச்சை பெறுகிறீர்கள் என்றால், கறுப்புப் பூஞ்சை நோய்க்கு மருத்துவ ஆலோசனையின் பேரில் மட்டுமே மருந்துகளை எடுத்துக் கொள்ளுங்கள் - என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# உழைப்பு உயர்வு தரும்



அதிகாலையில், அமெரிக்காவிலிருந்து விமானம் ஒன்று கிளம்பியது. கிளம்பிய அரைமணி நேரத்தில் அனைவரும் உறங்க ஆரம்பித்தனர். ஒரு வயதான பெரியவர் மட்டும் சில புத்தகங்களைப் படித்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கருகில் இருந்த இளைஞன், அவர் அமெரிக்காவின் மிகச் சிறந்த மனிதரும், தொழிலதிபருமான ராக்பெல்லர் என்பதைத் தெரிந்துகொண்டான்.

ஐயா, "நீங்கள் தான் ஏகப்பட்ட பணமும், புகழும் பெற்று விட்டீர்களே! இன்னும் இந்த வயதான காலத்தில் ஏன் உழைக்கிறீர்கள்? நிம்மதியாகத் தூங்க வேண்டியது தானே?" என்றான்.

சரிதான், "இப்பொழுது விமானி இவ் விமானத்தை நல்ல உயரத்தில் பறக்க வைத்து விட்டார்.

விமானமும் சுலபமாகப் பறக்கிறது. இப்பொழுது விமானி என்ஜினை அணைத்துவிட்டால் என்னவாகும்?" என்றார்.

விமானம் கீழே விழுந்து பெரிய விபத்து ஏற்பட்டு விடுமே, என பதற்றத்தோடு பதிலளித்தான் இளைஞன்.

இதை கேட்டு புன்னகைத்த ராக்ஃபெல்லர்,

வாழ்க்கைப் பயணமும் இப்படித்தான். கடுமையாக உழைத்து உயரத்துக்கு வர வேண்டியுள்ளது.


வந்த பிறகு, உயரத்தைத் தொட்டு விட்டோமே என்று உழைப்பதை நிறுத்தி விட்டால், தொழிலில் விபத்து ஏற்பட்டுவிடும்.

"உழைப்பு என்பது வருமானத்துக்காக மட்டுமல்ல, உடல் ஆரோக்கியம் மற்றும் மன நிம்மதிக்காகவும் தான்"என்று பதிலளித்தார்.

அந்த இளைஞன் உழைப்பின் உயர்வை உணர்ந்து கொண்டான்.



# வழிகாட்டுவோம்







# ஆங்கிலம் கற்போம்



Like
விருப்பம்



Airplane
வானூர்தி



Planet
கோள்



Chair
நாற்காலி



Fruit Juice
பழச்சாறு



Car
மகிழுந்து

# பொற்கோயில்



ஐந்தாவது சீக்கிய மதகுருவான ஸ்ரீ ஹர்மந்திர் சாஹிப் 1581ம் ஆண்டில் பொற்கோயில் கட்டும் பணிகளைத் தொடங்கினார்.

பொற்கோயிலைக் கட்ட 8 ஆண்டுகள் ஆகியுள்ளன.

பொற்கோயில் அமைவதற்கு முன்பாக இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் குரு நானக் தியானம் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

1762ம் ஆண்டில் நடந்த படையெடுப்புகளின்போது இக்கோயில் சேதப்படுத்தப்பட்டது. பின்னர் மகாராஜா ரஞ்சித் சிங் இதை புதுப்பித்துக் கட்டினார்.

பொற்கோயிலில் விசேஷ நாட்களில் சுமார் 2 லட்சம் பேருக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.


புனிதத் தல ாக கருதப்படும் பொற்கோயிலுக்கு, பிற மதங்க ளச் சேர்ந்த சுமார் 35 சதவீதம் பேர் ஆண்டுதோறும் வருகின்றனர்.

புதுப்பித்துக் கட்டும்போது இக்கோயிலின் கூரைப் பகுதியில் தங்கத் தகடுகளைப் பொருத்தியதால் இக்கோயில் பொற்கோயில் என்று அழைக்கப்படுகிறது.

பொற்கோயிலுக்கு, 'தர்பார் சாஹிப்', 'ஹர்மந்தர் சாஹிப்' ஆகிய பெயர்களும் உள்ளன.

கௌதம புத்தர் சில காலம் பொற்கோயிலில் இருந்ததாக கூறப்படுகிறது. அக்காலத்தில் பொற்கோயில் வணங்களால் சூழப்பட்டிருந்தது.

பொற்கோயிலைச் சுற்றி, மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஏரி அமைந்துள்ளது.



# பாடம் சொல்லித் தருவார்



பாடம் சொல்லித் தருவார்
படிக்கச் சொல்லிக் கேட்பார்!
தேடும் அறிவைப் பெருக்கித்
திறனை வளரச் செய்வார்!


கல்விச் சேவை செய்து
காக்கும் மனித தெய்வம்!
உள்ள இருளைப் போக்கி
ஒளிர வைக்கும் நெஞ்சம்!

நல்ல வழிகள் காட்டி
நடக்கச் செய்து மகிழ்வார்!
வல்ல பாதை தன்னில்
வாகை சூட்டி நெகிழ்வார்!

மனத்தில் நேர்மை ஒழுக்கம்
மலரச் செய்து பார்ப்பார்!
குணத்தில் மேலோன் ஆக்கும்
கொள்கை தன்னை ஆர்ப்பார்!

மதிப்பை உயரச் செய்வார்!
துதித்துப் போற்றி வாழ்வோம்!
அவர் வழியில் நாமும்
வாழ்வில் வெற்றி கொள்வோம்!

# ரோபோ



இப்போதெல்லாம் அடிக்கடி ரோபோக்கள் பற்றிப் பேசப்படுகிறது.

இன்னும் 16 ஆண்டுகளில் மனித மூளையை ரோபோக்கள் மிஞ்சிவிடும் எனவும் 2100 ஆம் ஆண்டுகளில் இது நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இதெல்லாம் மனிதனின் சோம்பேறித்தனத்தால்தான் வருகிறது என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் எந்திரங்களைப் பயன்படுத்த ஆரம்பித்துத் தானும் எந்திரமாகவே மாறிப் போகும் நிலைக்குத் தன்னைத் தானே ஆளாக்கிக் கொண்டுவிட்டான் மனிதன்.

ஆனாலும் சிலர் நம்பிக்கை இழக்கவில்லை. எப்படியிருந்தாலும் இந்த ரோபோக்களைப் படைத்தது மனிதன்தானே. அவனை அவற்றால் எப்படி மிஞ்ச முடியும்? அவன் கொடுத்த அறிவைத்தானே அவை பயன்படுத்துகின்றன? என்றெல்லாம் கேள்விகள் உள்ளன.



மேலும் ஒரு கப் கோப்பி கீழே கொட்டிவிட்டால் மனித மூளை உடனே கோப்பி கொட்டிவிட்டது, அந்த இடத்தைத் துடைத்து விட வேண்டும், இல்லாவிடில் கறை படிந்துவிடும் என்றெல்லாம் நொடியில் தீர்மானித்து விடுவதைப் போல ரோபோக்களால் முடியாது என்கிறார்கள்.


இந்தக் கறை படிந்துவிடும் என்ற தீர்மானத்துக்கு வர ரோபோக்களால் சீக்கிரம் முடியாதாம். பலவித கணக்குகளைப் போட்டு, கூட்டிக் கழித்துப் பெருக்கித்தான் ஒரு முடிவுக்கு வர அவற்றால் முடியுமாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதடு சிவப்பா மாறணுமா ?

பொதுவாகவே தாங்களது முகம் வெள்ளையாக இருக்கிறதோ இல்லையோ உதடு சிவப்பாக இருக்க வேண்டும் என்று பெண்களும் சரி ஆண்களும் சரி விரும்புவது வழக்கம் தான். ஆனால் உதட்டை சிவப்பாக்குவதற்கு உதட்டுச் சாயம் பூசுவது தற்காலிகமானது. நிரந்தரமாக உதட்டுச் சாயம் பூசாமல் நம்முடைய உதடு சிவப்பாக இருக்க வேண்டுமானால் நாம் எந்தவொரு கிரீம்களையோ, செயற்கையான மருந்துகளை உபயோகிக்க தேவையில்லை. வீட்டிலுள்ள சீனி மட்டும் போதும்.

ஒரு சின்ன பவுலில் ஒரு தேக்கரண்டி தேன் மற்றும் சிறிதளவு எலுமிச்சைச் சாறு விட்டு கிளறி அதனுடன் சீனியைப் போட்டு சற்று நேரம் கிளற வேண்டும். சீனி மணல் போல இருக்கும் பொழுது அதை உதட்டில் எடுத்து முழுவதும் பூச வேண்டும் . பூசிய பின்பு ஒரு இரண்டு நிமிடங்களுக்கு மேல் இருந்து கீழாக மசாஜ் செய்துகொண்டே இருக்க வேண்டும். பின் இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக என்று மாற்றி மாற்றி ஒரு இரண்டு நிமிடங்களுக்கு மட்டும் மசாஜ் செய்தால் போதும். அதன் பின்பு உதட்டைக் கழுவிவிட வேண்டும் . இதே போல தொடர்ந்து ஒரு வாரத்துக்குச் செய்து வந்தால் நிச்சயமாக உங்களுக்கு நீங்கள் விரும்பும் சிவப்பு நிற உதட்டுக்கும் அதிகமான அழகிய நிறத்தில் மாறும்.





# பேன், பொடுகு தொல்லையில் இருந்து தப்பிக்க...

நாம் குளிக்கும் தண்ணீரில் முதல் நாள் இரவே வேப்பிலையைப் போட்டு வைத்து மறு நாள் அந்த தண்ணீரில் குளித்து வந்தால் பேன் குறைந்து விடும்.

வேப்பிலையை பேஸ்ட் போல அரைத்து குளிப்பதற்கு அரை மணி நேரம் முன்பாக தலையில் தேய்த்து ஊற வைத்து பின் குளித்தல் நல்ல பலன் கிடைக்கும்.

இரவு தூங்கும் போது வேப்பிலை, துளசி இரண்டையும் தலைக்கு கீழே வைத்துக் கொண்டு தூங்கினால் பேன் குறைந்து விடும்.


வெந்தயத்தை முதல் நாள் இரவு ஊறவைத்து மறு நாள் அந்த வெந்தயத்துடன் தேங்காய்ப் பால் சேர்த்து நைசாக அரைத்து பின் அதில் எலுமிச்சை சாறு சேர்த்து தலையில் தேய்த்து மசாஜ் செய்து பின் குளித்து வந்தால் பேன் , பொடுகுத் தொல்லை விரைவில் குறைய தொடங்கும்.

குப்பை மேனி கீரை சாறு எடுத்து அதை குளிக்கும் முன் தலையில் தேய்த்துப் பின் குளித்து வர வேண்டும்.

10 பூண்டுகளை தோல் சீவி மையாக அரைத்துக் கொள்ளுங்கள், இத்துடன் இரண்டு டீஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து தலைமுழுவதும் தேய்த்து அரைமணிநேர கழித்து குளிக்கவும்.

பாதாம் பருப்பை நீரில் ஊறவைத்து அரைத்துக் கொள்ளவும், இதனுடன் எலுமிச்சை சாறு கலந்து தலையில் ஹேர்பேக்காகப் போட்டுக் கொள்ளவும், சுமார் ஒரு மணிநேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் நல்ல பலன் கிடைக்கும்.

உப்பு மற்றும் வினிகரைக் கலந்து தலைமுழுவதும் தடவவும், ஷவர் கேப் கொண்டு சுமார் இரண்டு மணிநேரம் தலையை மூடிக்கொண்டு ஷாம்போ போட்டுத் தலைக்கு குளிக்கவும், மூன்று நாள்களுக்கு ஒருமுறை இதை செய்து வந்தால் பலன் கிடைக்கும்.



# கோதுமை ரவை இட்லி

**தேவையான பொருள்கள்:**
கோதுமை ரவை- 1 கப் புளித்த தயிர்- 2 கப் உப்பு தேவையான அளவு - கரட் 2அல்லது3

**செய்முறை:** கடாயில் 1 கப் ரவையை நன்றாக நிறம் மாறும் வரை வறுக்க வேண்டும். பின்பு அதில் தயிர், உப்பு சேர்த்து நன்றாக கலந்து கொண்டு சுமார் 1 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். ஊறிய பிறகு அதில் நறுக்கிய கரட் சேர்த்து இட்லி குக்கரில் மாவை ஊற்றி வேக வைக்கவேண்டும். 10 நிமிடங்களின் பிறகு சூடான, ஆரோக்கியமான கோதுமை இட்லி தயார்



# சொக்லேட் சாப்பிடுவதால் இவ்வளவு நன்மையா?

சொக்லேட் என்ற பெயரை கேட்டாலே பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருக்கும் நாக்கில் எச்சில் ஊறும்.

இந்நிலையில், சொக்லேட் சாப்பிடுவதால் என்னென்ன கிடைக்கும் என்று பார்க்கலாம்.

1. முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்து சருமம் பளபளப்பாக மாறும் .
2. இதயக்கோளாறுகள், மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கிறது.
3. உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளைக் கரைத்து இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.
4. இளமையாக இருக்க சொக்லேட்டில் உள்ள கோகோ எனும் பொருள் காரணமாக அமைகிறது.
5. மனச்சோர்வு, மன அழுத்தம் உள்ளவர்கள் சொக்லேட் சாப்பிட மனநிலை சீராகும்.

# மேக்கப் போடாம உங்கள் முகம் அழகாகத் தெரிய...

பாலைக் காய்ச்சும் போது அதிலிருந்து வரும் ஆவியில் முகத்துக்கு ஆவி பிடித்து, அந்த வியர்வையைத் துடைக்காமல் காயவிட்டு, அரை மணி நேரம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாகும். தக்காளியை மிக்சியில் போட்டு அதனை ஜூஸாக்கி அதை முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கடலைமாவு போட்டுக் கழுவினால் முக பளபளப்பு அடையும். தோடம்பழத்தோலை காய வைத்து ஒரு கப் எடுத்துக்கொள்ளவும், அதனுடன் சம அளவு காய்ந்த ரோஜா இதழ்களைச் சேர்த்து மிக்சியில் போட்டு நன்றாக பொடியாக்கவும். அதோடு கடலைமா 2கப் சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும். தினமும், இந்தக் கலவையிலிருந்து 2 ஸ்பூன் எடுத்து, அதோடு சிறிதளவு பால் ஆடை சேர்த்து நன்கு குழைத்து பேஸ்ட் போல் செய்து முகத்தில் தடவி, காய்ந்ததும் பச்சைத் தண்ணீரில் சோப்பு போடாமல் கழுவிவிடவும்.

நன்கு கனிந்து பழுத்த நிலையில் இருக்கும் வாழைப்பழத்தைக் கூழாக்கி அதை முகத்தில் தேய்த்து, அரை மணி நேரம் கழித்து முகம் கழுவினால் முகப் பளபளப்பு கூடும். உருளைக்கிழங்கு சாறுடன் கடலைமாவையும் சேர்த்து முகத்தில் தேய்த்து வந்தாலும் முகம் பொலிவு பெறும். கஸ்தூரி மஞ்சள் தூளை பன்னீரில் கலந்து வெயிலில் வைத்து சூடாக்கி, அதை முகத்தில் தேய்த்து வந்தால் முகப்பருக்கள் மாயமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Invitation for Bids (IFB)
# Jaffna Municipal Council
# Purchasing of Street Lights
# JMC/PU/Street Light/2021 - 01

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Engineer, Jaffna Municipal Council. TP: 021 222 1186 Fax: 021 222 1187 E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.
4. Qualifications requirements include: Possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field. A margin of preference for eligible locally produced goods offered shall not apply. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from 21st September 2021 until 11th October 2021 from 09:00 hrs. to 15:00 hrs. on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs.2000.00 + All Taxes the payment method will be cash or bank draft drawn in favor of Commissioner, Jaffna Municipal Council.
6. Bids must be delivered to the address given below on or before 12th October 2021 at 15.00 hrs. Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.
7. A pre bid meeting will be held at Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on 01st October 2021 at 14:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna. The Bid Name &No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.
9. The bid validity shall be until:14.12.2021 (63 days after the deadline for bid submission)

| S. No. | Bid Name & No. | Name of the Item | Period of Contract | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Amount | Required Period |
| 01 | Purchasing of Street Lights JMC/PU/ Street Light/ 2021-01 | 30 Watts Energy saving bulb-217 Nos. | 1 Month | 60000.00 | 11.01.2022 |
| | | 40 Watts tube light set - 40 Nos. | | | |
| | | 50 Watts signal high power COB LED Street Light – 490 Nos. | | | |
| | | 100 Watts double high-power COB LED Street Light – 70 Nos. | | | |
| | | 150 Watts triple high power COB LED Street Light – 40 Nos. | | | |

**Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point Pedro Road, Nallur.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 10 . 1948



இறப்பு
17 . 09 . 2021

## திருமதி நடராசா நாகேஸ்வரி

வன்னியர் கோவிலடி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா நாகேஸ்வரி நேற்று (17.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசாவின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரி (ஜேர்மனி), பாலேந்திரா (சுவிஸ்), ஈஸ்வரி (சுவிஸ்), தாரகா, சயந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா (ஜேர்மன்), சுகிர்தா (சுவிஸ்), ஏரம்பமூர்த்தி (சுவிஸ்), குணாளன் (சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), பிரதீபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகராசா (ஓய்வுநிலை கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), இராசேஸ்வரி (கொழும்பு), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஞ்சி (ஜேர்மன்), கிருபானி (ஜேர்மன்), சசுதன் (சுவிஸ்), சுயன் (சுவிஸ்), யது (சுவிஸ்), யசானி (சுவிஸ்), பபிநாத் (மாணவன்-யாழ். பரி யோவான் கல்லூரி), மிதுசன் (கனடா), மிதுசிகா (கனடா) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2021) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**
**குணாளன் : 077 7749 288**
**தாரகா : 077 6579 412**
**பாலேந்திரா : 004176284654**

**தகவல்: குடும்பத்தினர்.**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

மில் அனுபவமுள்ள முகாமையாளர் பணியாளர் தேவை.

**மாப்பியன் மில்லேன்,**
**077 772 2215 சுதுமலை மானிப்பாய்.**

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தேர்தல் காரியாலயத்தில் வாகன சாரதியாகக் கடமையாற்றும் **திரு.ஞா. பாலகாசன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் சபாபதிப்பிள்ளை ஞானசுந்தரம்**

அவர்கள் கடந்த (24.08.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தேர்தல் அலுவலகத்தில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி சுகந்தினி திரிகரன்** அவர்களின் பாசமிகு தாயார்


**அமரர் நாகேந்திரம் தங்கமுத்து**

அவர்கள் கடந்த (13.09.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக் கழகம்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.03.1943



மறைவு
29.09.2020

## அமரர் பொன்னையா குமாரசாமி (திரவியம்)


**திதி : பூர்வ பக்க திரயோதசி (18.09.2021)**

அரியாலை மண்ணில் பிறந்து கொழும்பு வத்தளைப் பகுதியில் வசித்து அமரத்துவம் அடைந்த அன்னாரது இன்றைய முதலாம் ஆண்டு நிறைவில் அன்பான நினைவுகளோடு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வத்தளை**
**கொழும்பு**

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட

**திரு. நல்லையா சிவகுருநாதன் (சந்திரன்)**

அவர்கள் கடந்த (13.09.2021) அன்று இயற்கையெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா விநாயகர் திருப்பாத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18.09.2021) சனிக்கிழமை அமெரிக்காவில் இடம்பெறும்.

**076 175 3012**

**இ.தர்மராசா (தம்பியன்)**
**தம்பி ஹொட்டல்,**
**உரும்பிராய் மேற்கு**

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்
# பகிரங்க ஏல விற்பனை
## சுழிபுரம் உப அலுவலக பழைய கட்டடத் தொகுதி

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிருவாகத்தின் கீழ் இயங்கும் சுழிபுரம் உப அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப் பெற உள்ளமையால் பழைய உப அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டடத் தொகுதி பகிரங்க ஏலத்தின் மூலம் இடித்து அகற்றப்படவுள்ளன.

**ஏலம் நடைபெறும் திகதி :- 27.09.2021**
**ஏலம் நடைபெறும் நேரம் :- காலை 10.00 மணி**
**ஏலம் நடைபெறும் இடம் :- சுழிபுரம் உப அலுவலகம் வழக்கம்பரை**
**மீளளிக்க முடியாத வைப்புத் தொகை :- ரூபா 1000.00**
**ஆரம்ப ஏலத்தொகை :- ரூபா 180682.80**

ஏலம் பெற்றுக் கொண்டவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையை முழுமையாக செலுத்துவதுடன் 10.10.2021 ஆம் திகதிக்குள் கட்டடங்கள் முழுமையாக அகற்றப் படுதல் வேண்டும்.

**கௌரவ த.நடனேந்திரன்**
**தவிசாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

### சீனாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட

# உர மாதிரியில் நுண்ணுயிரிகள் மனிதனுக்குப் பாதகமில்லை

**அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு**



கொழும்பு, செப். 18

சீனாவிலிருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட உர மாதிரியில் அர்வீனியா எனப்படும் நுண்ணுயிர்கள் காணப்பட்டமை தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்றுத் தெளிவுபடுத்தினார்.

உத்தியோகப்பற்றற்ற முறையில் சீனாவிலிருந்து பரிசோதனைக்காக கொண்டுவரப்பட்ட உர மாதிரியிலேயே நுண்ணுயிர்கள் காணப்பட்டதென அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசு இறக்குமதி செய்யும் நைட்ரஜன் உரத்தில் விலங்குகள், தாவரங்கள் மற்றும் மனிதனுக்குப் பாதகமான நோய்க் கிருமிகள் இல்லை என விவசாய அமைச்சு மூன்று நாள்களுக்கு முன்பு அதாவது கடந்த 14 ஆம் திகதி உறுதிப்படுத்தியது.

அவ்வாறு நுண்ணுயிர்கள் இருக்கின்றமை தொடர்பில் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட ஊடகங்களில் வெளியாகும் செய்தி தவறானது என விவசாய அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட உரத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையற்ற பீதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என விவசாய அமைச்சு மக்களை கோரியுள்ளது. (தஇ)

# நெல்லை மறைத்தீர்களானால் அரிசியை இறக்குமதி செய்வோம்!

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

இரண்டு வருடங்களுக்குள் நெல்லின் அதிகபட்ச விலை 25 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இத்தகைய பின்னணியில் விவசாயிகள் போராட்டம் நடத்தத் தயாராக இருந்தால், வர்த்தக அமைச்சரின் தலையீட்டில் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

விவசாய அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"விவசாய அமைச்சராக, நான் இந்த அரிசியை இறக்குமதி செய்வதை நிறுத்தி வைத்துள்ளேன். எனவே, விவசாயிகள் நெல்லை விற்காவிட்டால், அரசு அரிசியை இறக்குமதி செய்யலாம்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (தஇ)

# எத்தனை நீதிமன்றத் தீர்ப்புகள் வந்தாலும்கூட இதய அஞ்சலிகளை எவராலும் தடுக்கமுடியாது

கொழும்பு, செப். 18

எத்தனை கெடுபிடிகள், எத்தனை நீதிமன்றத் தடையுத்தரவுகள் வந்தாலும் எமது இதயத்தால் அனுஸ்டிக்கும் அஞ்சலியை எதுவும் தடுக்க முடியாது என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் திலீபனின் நினைவேந்தலை அனுஸ்டிப்பது தொடர்பில் வெல்லாவெளிப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கமைவாக களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் விடயம் தொடர்பில் எவ்வழிகளில் அடக்கி ஒடுக்க முடியுமோ அத்தனை வழிகளையும் இந்த அரசு கையாளுகின்றது. அதற்குத் தற்போதைய கொரோனா நிலைமையும் கைகொடுக்கின்றது. கொரோனாவைக் காரணம் காட்டி தமிழர்களின் நிகழ்வுகளை மாத்திரம் அடக்க முயற்சிக்கின்றது.

என்ன இருந்தாலும், எத்தனை கெடுபிடிகள் வந்தாலும், எத்தனை நீதிமன்றத் தடையுத்தரவுகள் வந்தாலும் எமது இதயத்தால் அனுஸ்டிக்கும் அஞ்சலியை எதுவும் தடுக்க முடியாது. அவ்வழிமுறைகளையே தற்போதைய நிலையில் நாம் கையாள எண்ணியுள்ளோம்.

எம்மை நம்பும் எம் உறுப்பினர்களை அரசின் கொடூர பிடிக்குள் சிக்க வைக்கவும் நாம் தயாராக இல்லை. ஆனால், அனைத்துக்கும் காலமும், சர்வதேசமும் பதில் சொல்லும். - என்றார். (த150)

# சிவப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்றது இலங்கை

கொழும்பு, செப். 18

கொரோனாத்தொற்று ஆபத்துக் காணப்படும் சிவப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த நாடுகளிலிருந்து இலங்கையை நீக்குவதற்கு பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் இலங்கையின் பெயர் குறித்த பட்டியலிலிருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

### உத்தியோகபூர்வ...

மதுபானசாலைகள் நேற்றுத் திடீரென்று திறக்கப்பட்டு விற்பனை நடைபெற்றன. அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக ஏராளமானோர் மது விற்பனை நிலையங்கள் முன்பாக நேற்று ஒன்று கூடினர். அவர்களில் மிக அதிகளவில் காணப்பட்டவர்கள் இளைஞர்களே. அவர்கள் அதிகமான இடங்களில், நீண்ட வரிசையில் காணப்பட்டனர். தனியாள் இடைவெளியின்றியும், சிலர் முகக்கவசம் இன்றியும் தள்ளுப்பட்டவாறு மதுபான வகைகளைக் கொள்வனவுசெய்வதற்கு முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

சில இடங்களில் பொலிஸார் அவர்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். எனினும், யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் பொலிஸார் சுகாதார விதிமுறைகளைக் கண்டுகொள்ளவேயில்லை. அதனால், மதுபான வகைகளைக் கொள்வனவுசெய்ய வந்தோர் நெருக்கமாக நின்று தள்ளுப்பட்டவாறே காணப்பட்டனர்.

இந்தநிலையில், வவுனியா மதுபானசாலைகளின் முன்பாக குவிந்தவர்களில் 13 பேரை சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து கைதுசெய்தனர்.

இதேவேளை, உத்தியோபூர்வ அறிவிப்பு வெளியாக முன்னரே மதுபான விற்பனை நிலையங்களைத் திறக்க பொலிஸார் ஏன் அனுமதி வழங்கினர் என்று பல தரப்பினரும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, நாட்டில் மதுபானசாலைகளைத் திறப்பதற்கு முறையான அனுமதி வழங்கப்படவில்லை என மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார். எனினும், நிதி அமைச்சிலிருந்து மதுவரித் திணைக்களத்துக்கு உத்தியோகப்பற்றற்ற வகையில் வந்த உத்தரவை அடுத்தே நாடு முழுவதும் மதுக்கடைகள் நேற்றுத் திறக்கப்பட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மதுபானசாலைகளை திறக்கும் விவகாரம் குறித்து நிதி அமைச்சுக்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே கலந்துரையாடல்கள் நடந்ததாக மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மதுக்கடைகளை மீண்டும் திறக்க நிதி அமைச்வே அதிகாரப்பூர்வமற்ற ஒப்புதலை அளித்துள்ளது. எனினும் இது குறித்த எழுத்துமூல உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் வெளியிடப்படவில்லை.

இது குறித்து முறையான முடிவு எடுப்பதற்கு முன்பே சில ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்தே மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் மதுவரித் திணைக்கள உரிமம் பெற்ற வைன் விற்பனை நிலையங்கள் (எப்.எல். 04 உரிமம்) மற்றும் பியர் மற்றும் வைன் கடைகள் ( எப். எல். 22 பி உரிமம்) கொண்ட மதுக்கடைகளை திறக்க முறைசார அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் நேற்று அனைத்து வகை மதுபானங்களும் விற்பனை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

### அமைச்சர்களின்...

இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாய ராஜபக்சவுக்கு நேற்று கடிதமொன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மொட்டு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார,

"ஜனாதிபதி மற்றும் பிரதமரால் எடுக்கப்படும் தீர்மானங்கள் சில அமைச்சர்களின் செயற்பாடுகளால்தான் பயனற்றுபோகின்றன. பாதுக்க பிரதேசத்தின் அபிவிருத்திக்குழுத் தலைவராக ஜனாதிபதியே என்னை நியமித்தார். சிவில் தரப்பினர், பொலிஸார், பிரதேச சபையினருடன் இணைந்து சிறப்பாக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. எனினும், அரசியல் ரீதியில் அழுத்தங்கள் வந்தன. பொலிஸார் சுயாதீனமாகச் செயற்பட்டதால் பாதுகாக்கப்பட்டோம்.

இந்தநிலையில், பாதுகாக்க பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக அமைச்சர் காமினி லொக்குகேவுக்கு வேண்டியவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் கீழ்த்தரமான செயலை செய்ய வேண்டாம் என விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகரவிடம் வலியுறுத்தியிருந்தேன். ஏனெனில், பொலிஸ் பிரிவ அரசியல் மயப்படுத்தப்படக்கூடாது. கீழ்த்தரமாகச் செயற்படும் இத்தகைய அமைச்சர்களுடன் இணைந்து செயற்படமுடியாது என்பதால் பதவி விலகும் முடிவை எடுக்கின்றேன்." என்றார். (த44)

### யாழ்.பல்கலை....

துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கு அனுமதி கோரி யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக்கு நேற்று அனுப்பிய பதில் கடிதத்திலேயே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் கொரோனாத் தொற்று நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது பற்றி அன்றைய நாளில் சாதகமாகப் பரிசீலிக்கப்படலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

**தேவை**

ஊர்ச் சேவல் 1kg 800/- விறாத்துக்குஞ்சு 1kg 600/-. கல்பேட் 1kg 450/-. ஊர்முட்டை என்பன கொள்வனவு செய்யப்படும்.

தாசன் பாம்
158/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் காணி மாவட்டப் பதிவகம் அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. ப. சுரேஷ்குமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் மாப்பாணி பசுபதி

அவர்கள் கடந்த (13.09.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக் கழகம்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா ஒழிப்புச் செயலணியின் விசேட கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில், வீடியோ தொழில்நுட்பத்தினூடாக நேற்று நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டிருந்தநிலையிலேயே, அது முதலாம் திகதிவரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய கூட்டம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டே, நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டத்தை, ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியுடன் நீக்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

**மாணவர்களுக்கு தடுப்பூசி**

இந்தக் கூட்டத்தின்போது, பிள்ளைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்து உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன, "நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள 12 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுமாறு, விசேட சுகாதார நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது" என்றார். அத்துடன், "சிகிச்சையக (கிளினிக்) விசேட மருத்துவ நிபுணர்களின் கண்காணிப்பின்கீழ், பெற்றோர்களின் அனுமதியுடன், அந்தச் சிகிச்சையகங்களுக்குள் வைத்து மாத்திரம் மேற்படி சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. உலகின் ஏனைய நாடுகளில்கூட 12 - 15 வயதுக்கிடைப்பட்ட ஆரோக்கியமான சிறுவர்களுக்குரிய தடுப்பூசி ஏற்றல் தொடர்பில், இதுவரையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், 15 தொடக்கம்19 வயதுக்கிடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலுக்குரிய பரிந்துரை கிடைக்கப்பெற்றுள்ளது என்று தெரிவித்தார்.

இதன்படி, நாட்டிலுள்ள 15 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்தி முடிக்குமாறும் மருத்துவமனைகளுக்குள் வைத்து மாத்திரம் அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலை முன்னெடுக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அத்துடன், அது தொடர்பில் அந்தச் சிறுவர்களின் பெற்றோருக்குத் தெளிவுபடுத்துவதன் அவசியத்தையும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்

விசேட மருத்துவ குழுவின் பரிந்துரைக்கமைய, அனைத்துச் சிறுவர்களுக்கும், பைஸர் தடுப்பூசியை மாத்திரம் ஏற்றுமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

**இளையோருக்கென விசேட தடுப்பூசி இல்லை**

தெரிவுசெய்யப்பட்ட தடுப்பூசிகளை மாத்திரமே இளைஞர் - யுவதிகள் எதிர்பார்க்கும் நிலைமை தோன்றியுள்ளது. அவர்களுக்கென விசேட தடுப்பூசியொன்று அறிமுகப்படுத்தப்படவில்லை. நாட்டு மக்களுக்கு ஏற்றப்படும் தடுப்பூசிகள் அனைத்தும் தரம்வாய்ந்தவை என்று விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் நீலிகா மலவிகே ஆகியோர் எடுத்துரைத்தனர். அதனால், விசேட தடுப்பூசியொன்று கிடைக்கும் வரை காத்திருக்காது, அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வர வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

**ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கொரோனா சிகிச்சை நிலையம்**

சிக்கல் நிலையுடன்கூடிய கொரோனா நோயாளிகளுக்கு ஆயுள்வேத சிகிச்சையளிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அதற்காக, கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைகளில், கொரோனா சிகிச்சை நிலையங்களை உருவாக்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

**மோட்டார் திணைக்கள பணிகளைத் தொடரவும்**

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், காணிப் பதிவு அலுவலகம் போன்ற அத்தியாவசியச் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் நிறுவனங்களின் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்த ஜனாதிபதி, இது தொடர்பில் அந்த நிறுவனங்களின் தலைவர்கள், உரிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

**பொருளாதார அபிவிருத்தி உயர்நிலையில் பேணப்படுகிறது**

நிலவும் சவால்மிக்க நிலைமைக்கு மத்தியிலும், ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகளில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை உயர்ந்த பட்சத்தில் பேண முடிந்துள்ளது எனக் கூறிய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்கள், அதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய சுகாதார, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் துறையினருக்கும் நன்றி தெரிவித்தார்.

மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதார வழிகள் என்பன எக்காரணங்கொண்டும் பாதிக்கப்படாத வகையில், அத்தியாவசிய சேவைகளை முன்னர் போன்று தொடந்து முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, அனைத்துப் பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறந்துவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

**பாடசாலைகளைத் திறக்க இணைந்து பணியாற்றவும்**

200க்கும் குறைவான மாணவர் கொள்ளளவைக் கொண்டுள்ள கிராமிய பாடசாலைகளைத் திறப்பது தொடர்பிலும், கூட்டத்தின் போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது. இது விடயத்தில், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் அனைவரும், கல்வி அமைச்சுடன் இணைந்துப் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும், ஜனாதிபதி எடுத்துரைத்தார். சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டுமென்றும், இதன்போது எடுத்துரைக்கப்பட்டது. - என்றுள்ளது. (த)

## கொரோனாவால்...

னர்.

அவர்களில் ஒருவர், திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அவர் மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில் நேற்று உயிரிழந்தார்.

மற்றயவர் சுகவீனம் காரணமாக வீட்டில் உயிரிழந்திருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த-110)

## வாழ்வாதாரத்துக்கு...

நேற்று நடைபெற்ற கொரோனா ஒழிப்பு விசேட செயலணிக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளல் தொடர்பில் பொதுமக்களை ஊக்குவிக்கும் முழுப்பொறுப்பும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உள்ளதென்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹனவிடம், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இதேவேளை, சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாது, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, கூட்டத்தில் பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார். (த)

## 121 பேர் சாவு...

ழந்த 121 பேரில் 59 பெண்களும் 62 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-22)

## வீதிகளில்...

இதனால்தான் வைரஸ்கள் இன்று வீடுகளுக்குள் புகுந்துள்ளன."

இவ்வாறு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் விசேட மருத்துவ நிபுணருமான பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இது தொடர்ப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று பொதுவெளியில் தனியாள் இடைவெளிகளைக் காணமுடியாமல் இருக்கின்றது. ஊரடங்கை மதித்து நடந்து வீட்டிலுள்ள அனைவரினதும் உயிர்களையும் காப்பாற்றுமாறு வெளியில் திரியும் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அத்தியாவசிய தேவைகளுக்கு வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே வெளியில் செல்லுங்கள்.

வீட்டிலிருந்து வெளியே போகும்போதும் வீட்டுக்குள் வந்த பின்னரும் சுகாதார விதிமுறைகளை உரிய வகையில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நாடு திறக்கப்பட்டாலும் கட்டுப்பாடுகளை அரசு அதிகரிக்க வேண்டும். மாவட்டங்களுக்கிடையில் அல்லது மாகாணங்களுக்கிடையில் இறுக்கமான கட்டுப்பாடுகளை அரசு விதிக்க வேண்டும். இலங்கை இன்னமும் கொரோனாவின் சிவப்பு அபாய வலயத்துக்குள் இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, அரசு அவசரப்பட்டு நாட்டை முழுமையாகத் திறக்கக்கூடாது. எதிர்வரும் வாரங்கள் தீர்க்ககரமானவை" என்றார். (த-22)

## வீட்டுத்திட்டக்..

திட்டப்பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கொரோனாத்தொற்றைக் காரணம்காட்டி அத்தியாவசிய உணவுப் பொருள்கள் போன்று கட்டடப் பொருள்களுக்கும் வர்த்தகர்கள் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றனர் என்று குற்றம் சாட்டும் பொதுமக்கள், அத்தகைய பொருள்கள் மீதான தட்டுப்பாட்டை நீக்ககவேண்டும், விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த வேண்டும்.

வீட்டுத் திட்டத்துக்குத் தேவையான அனைத்துக் கட்டடப் பொருள்களின் விலையும் ஒரு மாத கால இடைவெளிக்குள் திடீரென அதிகரித்து வருகிறது. கடந்தவாரம் ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 50 கிலோகிராம் சிமெந்து நேற்று ஆயிரத்து 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. தனியார் வர்த்தக நிலையங்கள் அதிகளவில் சிமெந்து, இரும்புக்கம்பிகள், ஆணிகள் போன்றவற்றை போட்டிபோட்டு உற்பத்தி நிறுவனங்களில் கொள்வனவுசெய்து வருகின்றனர். அதனால் கூட்டுறவுச் சங்கங்கள் சிமெந்து பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் கட்டடப்பொருள்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வருடவீட்டுத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு முதற்கட்ட கொடுப்பனவு இன்னமும் முழுமையாக பிரதேச செயலகங்களால் வழங்கப்படாத நிலையில், கற்கள், மணல், கம்பிகள், சிமேந்து போன்றவற்றின் விலை நாளுக்குநாள் அதிகரித்துச்செல்கின்றது.

எனவே, வீடுகளை அமைக்க அரசு வழங்கும் 10 லட்சம் ரூபா மற்றும் 6 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைப்பதற்கான கொடுப்பனவை அவற்றின் இரு மடங்குகளாக அதிகரித்து வழங்கி, வீட்டுத் திட்டங்களைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுகக்கவேண்டும். - என்று பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-9)

## கொரோனாத்...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 764 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து186 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 29 ஆயிரத்து 776 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## கொலையென்று..

பட்டனர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாக வீதியோரமாக நேற்றுமுன்தினம் சுயநினைவற்றிருந்த இளைஞனை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோது, இளைஞன் உயிரிழந்துவிட்டமை தெரியவந்தது.

கீரிமலை நல்லிணக்கபுரத்தை சேர்ந்த ம.ஜெனுசன் (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தநிலையில், குறித்த இளைஞன் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் எனும் சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, குறித்த இளைஞன் நேற்று முன்தினம் அந்தப் பகுதியில் நடைபெற்ற இறப்பு நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்தவேளை அங்கு சிலர் அவருடன் முரண்பட்டனர் என்றும் அவர்களே இளைஞன் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் உயிரிழந்தவரின் உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தநிலையில், உயிரிழப்புத் தொடர்பில் விசாரித்து கொலையாளிகளை கைது செய்யக்கோரியே, உயிரிழந்தவரின் உறவினர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுப்பட்டனர். (த-10,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, பிரிட்டன், ஆஸி. புதிய இராணுவ உடன்படிக்கை



பீஜிங், செப். 18

அமெரிக்காவும் பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் அறிவித்திருக்கும் புதிய தோழமைக் கூட்டணியை கடுமையாக கண்டனம் செய்திருக்கும் சீனா, அந்தக் கூட்டணி பிராந்திய சமாதானத்தை மலினப்படுத்தி ஆயுதப்போட்டியை தீவிரப்படுத்தும் என்று கூறியிருக்கிறது.

மூன்று நாடுகளும் செய்திருக்கும் இராணுவ உடன்படிக்கையின் கீழ் ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தி நீர்மூழ்கிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் இருப்பதையே பீஜிங் குறிப்பாக கண்டித்திருக்கிறது. பிராந்தியத்தில் அதிகரிக்கும் சீனாவின் இராணுவ பிரசன்னத்துக்கான எதிர்வினையாகவே இந்த அணுசக்தி நீர்மூழ்கி வழங்கல் ஏற்பாடு அமைந்திருப்பதாக அவதானிகள் பலரும் நோக்குகிறார்கள்.

'அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான அணுசக்தி நீர்மூழ்கி ஒத்துழைப்பு பிராந்திய சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் பாரதூரமான முறையில் மலினப்படுத்தியிருப்பதுடன் ஆயுதப்போட்டியை தீவிரப்படுத்தும் ஆபத்தையும் கொண்டிருக்கிறது. அதேவேளை, சர்வதேச அணுவாயுத பரம்பல் தடுப்பு முயற்சிகளையும் பாதிக்கிறது' என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஷாவோ லிஜியான் நேற்றுமுன்தினம் கூறினார்.

'அமெரிக்காவும் பிரிட்டனும் ஆஸ்திரேலியாவுக்கு மிகுந்த கூருணர்வுடைய அணுசக்தி நீர்மூழ்கி தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்யவிருப்பது அந்த நாடுகள் புவிசார் அரசியல் போட்டாபோட்டியில் ஒரு கருவியாக மீண்டும் அணு ஏற்றுமதியை பயன்படுத்துகின்றன என்பதையும் இரண்டகமாக நடந்துகொள்கின்றன என்பதையும் நிரூபித்து நிற்கிறது' என்று அவர் கூறினார். ஆஸ்திரேலியா அதன் அணுவாயுத பரவல் தடுப்பு கடப்பாடுகளில் அக்கறையுடன் இருக்கிறதா என்று அதன் அயல் நாடுகள் உட்பட சர்வதேச சமூகம் கேள்வி கேட்பதற்கு முழு நியாயமும் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**நெருக்கமான தன்னலக் குழு**

மூன்று நாடுகளினதும் உடன்படிக்கையை 'நெருக்கமான தன்னலக் குழுவாக செயற்படுவதில் நாட்டமுடைய ஓர் ஏற்பாடு' என்று ஷாவோ வர்ணித்திருக்கிறார். அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'குவாட்' அமைப்பை வர்ணிப்பதற்கும் இதே வார்த்தைகளை பீஜிங் முன்னர் பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய பொறிமுறைகள் மூன்றாவது தரப்பைக் குறிவைக்கக்கூடாது அல்லது அதன் நலன்களை மலினப்படுத்தக்கூடாது என்று சீனா நம்புகிறது என்று கூறிய ஷாவோ, நெருக்கமானதும் பிரத்தியேகமானதுமான தன்னலக் குழுவாக செயற்படுவதிலான நாட்டம் சமகாலப் போக்குகளுக்கும் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் அபிலாசைகளுக்கும் விரோதமானது என்பதுடன் அதற்கு ஆதரவு கிடையாது. அதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் குழுக்களை சீனா கண்டித்திருக்கின்ற அதேவேளை, சீனாவே அது விரும்பித் தெரிவு செய்த நாடுகளுடன் இத்தகைய பல குழுக்களின் அங்கமாக இருக்கிறது என்று இந்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆப்கானிஸ்தான் விவகாரத்திலும் தெற்காசியாவின் ஒத்துழைப்பிலும் இந்தியாவையும் பூட்டான் மற்றும் மாலைதீவையும் தவிர்த்து வேறு நாடுகளுடன் சீனா சேர்ந்து செயற்படுகிறது. பிரிக்ஸ், ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு போன்ற பல்தேசிய குழுக்களிலும் சீனா அங்கம் வகிக்கிறது என்று இந்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். இவ்விரு அமைப்புகளில் இந்தியாவும் உறுப்புரிமையைக் கொண்டுள்ளது. 'சம்பந்தப்பட்ட நாடுகள் காலாவதியாகிப்போன கெடுபிடி யுத்தகால மனநிலையையும் குறுகிய சிந்தனையுடைய புவிசார் அரசியல் எண்ணப்போக்குகளையும் கைவிட்டு பிராந்திய நாடுகளின் மக்களின் விருப்பங்களை மதித்து பிராந்திய அமைதிக்கும் உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்திக்கும் பங்களிப்பைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தங்களுக்குத் தாங்களே கெடுதியை ஏற்படுத்திக்கொள்வதாகவே முடியும்' என்று ஷாவோ கூறினார். (ம)

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்கு தடை

யாழ்ப்பாணம், செப்.18

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் காணிகள் அடையாளப்படுத்தப்படும் போது, சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள் ளார்.

மாவட்ட செயலரின் ஒப்புதல் இன்றி, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவையும் இடம்பெறக் கூடாது என்று தெரிவித்துள்ள அமைச்சர், பிரமணந்தனாறு மற்றும் இரணைமடு ஆகிய இடங்களில் நடக்கும் காணி அடையாளப்படுத்தும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)

நாரஹேன்பிட்டி மருத்துவமனை விவகாரம்

# கைதான நபருக்கு புலிகளுடன் தொடர்பா?

### கைக்குண்டு தொடர்பான முழுமையான தெளிவுள்ளமையால் இந்தச் சந்தேகம்

கொழும்பு, செப். 18

கொழும்பு நாரஹேன்பிட்டி மருத்துவமனையில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் கைதான சந்தேக நபருக்கு புலிகளுடன் தொடர்பா? என்ற கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று விசாரணை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைது செய்யப்பட்ட நபருக்கு கைக்குண்டு தொடர்பில் முழுமையான தெளிவு காணப்படுகின்றது. கைக்குண்டின் பாதுகாப்பு ஆணியைக் கழற்றி, நுளம்புச் சுருளொன்றை இணைத்து, வெடிக்கவைக்கும் வகையில் இந்தக் கைக்குண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

கைக்குண்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தமையினால் சந்தேகநபர் கைக்குண்டு தொடர்பிலான அறிவைக் கொண்டுள்ளவர். மீட்கப்பட்ட கைக்குண்டும், விடுதலைப் புலிகள் பயன்படுத்திய கைக்குண்டுகளும் ஒரே விதமானவை. எனவே அவ்வாறான கோணத்திலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ம)

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம், ஒட்டுமடம் சந்தியில் இருந்து காரைநகர் செல்லும் வீதியில் இரு வழிப்பாதையுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்)

தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00 - மாலை 6.00 மணிவரை)

076 221 2037, 077 288 0152
077 064 2661, 076 734 1023

## மரண அறிவித்தல்



### திருமதி சதீஸ்குமார் அபிமினி

(போதனாசிரியர், அஞ்சல் பயிற்சிக் கல்லூரி, தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்)

இன்னாவத்தை கொல்லங்கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் உந்துடை அளவெட்டி மத்தி அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதீஸ்குமார் அபிமினி கடந்த (15.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் நித்தியானந்ததேவி தம்பதியரின் அன்பு மருமகளும், சதீஸ்குமார் (குறிஞ்சி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும், இராஜினிதேவி, சிவலோகநாதன் (லண்டன்), இரஞ்சினிதேவி (முன்னாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர், அளவெட்டி), சியாமினி (ஆசிரியர், யா/இளவாளை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), சிவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசலிங்கம், மாசிலாமணி, புனிதவதி (லண்டன்), லதாஜினி (ஆசிரியர், யா/அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), சுஞ்சீபன் (LOLC PL II குழு, முகாமையாளர்), சுபாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், துஷாந், சேதுசன் ஆகியோரின் சித்தியும், திஷானி, சிவானிக்கா, தேனுஜா, வினோஜன், கஸ்வினி, மிதின் ஆகியோரின் மாமியும், அன்னலட்சுமி, சீதாலட்சுமி, விசியலட்சுமி, திலகவதி ஆகியோரின் பெறாமகளும், வரதராஜாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கோம்பயன் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 611 1244
077 949 0995

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.